# திருவுந்தியார்
# திருக்களிற்றுப்படியார்

## தெளிவுரை

உரையாசிரியர் :
பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை,
எம். ஏ., எம். எல்.,

# மெய்கண்ட சாத்திரம் தெளிவுரை

## திருவுந்தியார்
## திருக்களிற்றுப்படியார்

பேராசிரியர்

கா. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., எம்,எல்.

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்.,
154, டி. டி. கே. சாலை, சென்னை-18.

1988

காந்திமதிநாத சுப்பிரமணிய பிள்ளை (1888)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

கிளைகள் :

79, பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை-108.
திருநெல்வேலி-6. மதுரை-1. கோயமுத்தூர்-1
கும்பகோணம்-1. திருச்சிராப்பள்ளி-2. சேலம்-1.

கழக வெளியீடு : க௯௫௫

(கழகம்) பதிப்பு 1 : 1988

R 673 x 1
N 88

MEIKANDA SATHIRAM THELIVURAI
TIRUVUNDIYAR, TIRUKKALITTUPPADIYAR

அப்பர் அச்சகம், சென்னை-108.

# மெய்கண்ட சாத்திரம்

மூலமும்

கா. சுப்பிரமணிய பிள்ளை

தெளிவுரையும்

திருவியலூர் உய்யவந்ததேவநாயனார்

அருளிய

திருவுந்தியார்

# மெய்கண்ட சாத்திரம்

## 1. திருவுந்தியார் மூலம்

1. அகளமா யாரு மறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானாகத் தந்ததென் றுந்தீபற.

2. பழக்கந் தவிரப் பழகுவ தன்றி
உழப்புவ தென்பெணே யுந்தீபற
ஒருபொரு ளாலேயென் றுந்தீபற.

3. கண்டத்தைக் கொண்டு கரும முடித்தவர்
[1]பிண்டத்தில் வாராரென் றுந்தீபற
பிறப்பிறப் பில்லையென் றுந்தீபற.

4. [2]இங்ஙனிருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகேன்
அங்ஙனிருந்ததென் றுந்தீபற
அறிவு மறிவதென் றுந்தீபற.

5. ஏகனு மாகி யநேகனு மானவன்
நாதனு மானானென் றுந்தீபற
நம்மையே யாண்டானென் றுந்தீபற.

---

(வேறு பாடம்) 1. பிண்டத்து. 2. எங்ங.

# 1. திருவுந்தியார் தெளிவுரை

1. இயல்பாகவே மலமற்றதாய், யாரும் அறிதற்கரிய தொரு பரம்பொருளாகிய சிவபெருமான், தவமுதிர்ச்சியால் பக்குவமடைந்த உயிர்களுக்கு அருள் புரியும்பொருட்டு ஆசிரியனாய்த் திருமேனி கொண்டெழுந்தருளி வந்து பர ஞானத்தைக் கொடுத்து அவைகளைத் தன் தன்மை எய்தும் படி செய்தருளுவன்.

2. திருவடிப்பேரறிவு பெற்ற பின்னும் நெடுநாட் பழகிய பழக்கத்தால் ஏற்படும் மல வாசனையை, ஒப்பற்ற திரு வருள்வயமாய் நின்று ஒழிக்கப் பழகுதல் வேண்டும்.

3. ஆசிரியனாய் வந்த கடவுள் நல்கிய ஞானத்தைக் கொண்டு, நிட்டைநிலை கைகூடப் பெற்றவர் மீண்டும் பிறவார் என்றறிக.

4. சிவானந்தமானது எவ்வாறிருந்ததென்று சொல்ல முடியாது; அது சுட்டறிவினால் அறியத்தக்கதன்று.

5. ஒரே பரம்பொருளாகிய பெருமான் பல்லுயிருக்கும் உயிராய் நின்றும் ஐந்தொழில் நடாத்தியும் தலைவனாய் நிற்கின்றனன். அவனே நமது ஆண்டவன்.

6. நஞ்செய லற்றிந்த நாமற்ற பின்நாதன்
தன்செய றானேயென் றுந்தீபற
தன்னையே [1]தந்தானென் றுந்தீபற.

7. உள்ள முருகி [2]லுடனாவ ரல்லது
தெள்ள வரியரென் றுந்தீபற.
சிற்பரச் செல்வரென் றுந்தீபற.

8. ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் [3]தேசெல்க வுந்தீபற
விமலற் கிடமதென் றுந்தீபற.

9. ஆக்கிலங் கேயுண்டா யல்லதங் கில்லையாய்ப்
பார்க்கிற் [4]பரமதென் றுந்தீபற
பாவனைக் கெய்தாதென் றுந்தீபற.

10. அஞ்சே யஞ்சாக வறிவே யறிவாகத்
துஞ்சா துணர்ந்திருந் துந்தீபற
துய்ய பொருளீதென் றுந்தீபற.

11. தாக்கியே தாக்காது நின்றதோர் தற்பரன்
நோக்கிற் குழையுமென் றுந்தீபற
நோக்காமல் நோக்கவென் றுந்தீபற.

12. மூலை யிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியரென் றுந்தீபற
தவத்திற் றலைவரென் றுந்தீபற.

---

(வே. பா.) 1. தந்ததென். 2. யுடனவர். 3. தேசெல. 4. பரமதன்று.

6. நம் செயலென்பதும் நாமென்பதும் அற்றபின் எல்லாச் செயலும் இறைவன் செயலென்பது விளங்கும். அவன் தன்னையே நமக்குத் தந்தானென்று மகிழ்வோமாக.

7. உள்ளம் உருகினாற்றான் அவர் உடனிற்பது விளங்கும்; அல்லாத இடத்து அவரைத் தெளிந்தறிதல் இயலாது; அவர் கரணங்கடந்த மேலான ஞானச் செல்வரென்றறிக.

8. சுட்டியறியும் ஆறு ஆதாரங்களில் அவனை வழிபட்டு யோக சமாதி யடைந்தபின் சுட்டற்ற மேலிடத்தே செல்க; அதுதான் பாசமற்ற பெருமானுக்கு இடம் என்று அறிக.

9. நினைத்தபோது தோன்றியும் நினையாதபோது தோன்றாமலும் இறைவன் இருக்கப்பெறும் நிலை, மேலான ஞானநிலையன்று. அது பாவனை நிலை. அந்நிலைக்கு அப்பாற்பட்டவன் கடவுள் என்றறிக.

10. ஐந்தெழுத்தின் வைத்து இறைவனை வழிபடும் ஞான முறையைப் பின்பற்றித் தனது அறிவைச் சிவஞானத்தோடு இரண்டறத் தொடர்பு படுத்தித் தூய அறிவுடைய முதல்வனைக் காண்க.

11. உலக அறிவோடு கலந்தும் கலவாது நின்ற கடவுள், ஆராய்ச்சியறிவிற்குப் புலனாகான்; சுட்டறிவால் பாராமல் திருவருட் கண்ணால் அவனைப் பார்த்தல் வேண்டும்.

12. மூலையாகிய உடம்பினிலிருந்தவரை அருள் வெளியாகிய முற்றத்தில் விட்டவர் எப்பொருளிலும் பெரிய இறைவரென்றுணர்க. தவத்திற்குத்தக்க பயனளிக்கும் தலைவர் இவரே என்றுணர்க.

13. ஓட்டற்று நின்ற வுணர்வு பதிமுட்டித்
தேட்டற் றிடஞ்சிவ முந்தீபற
தேடு மிடமதன் றுந்தீபற.

14. பற்றை யறுப்பதோர் பற்றினைப் பற்றிலப்
பற்றை யறுப்பரென் றுந்தீபற
[1]பாவிக்க வாராரென் றுந்தீபற.

15. கிடந்த கிளவியைக் கிள்ளி யெழுப்பி
உடந்தை யுடனேநின் றுந்தீபற
உன்னையே கண்டதென் றுந்தீபற.

16. உழவா துணர்கின்ற யோகிக ளொன்றோடுந்
[2]தழுவாமல் நிற்பரென் றுந்தீபற
[3]தாழ்மணி நாவேபோ லுந்தீபற.

17. திருச்சிலம் போசை யொலிவழி யேசென்று
நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற
நேர்பட வங்கேநின் றுந்தீபற.

18. மருளுந் தெருளு மறக்கு மவன்கண்
அருளை மறவாதே யுந்தீபற
அதுவேயிங் குள்ளதென் றுந்தீபற.

19. கருது [4]வதன்முன் கருத்தழியப் பாயும்
ஒருமகள் கேள்வனென் றுந்தீபற
உன்ன வரியனென் றுந்தீபற.

---

(வே. பா.) 1. பாவிக்கில். 2. தழுவாது. 3. தாழ்ந்த மணி நாப்போல். 4. அதன்முன்னங்.

13. போக்குவரவின்றி ஒழிவற நிறைந்த ஞானமாகிய ஊரினையடைந்து, ஆராய்ச்சி ஒழிந்து நிற்கும் நிலையில் சிவம் விளங்கும். அந்நிலையில் ஆராய்ச்சி நிகழ இடம் இல்லை.

14. பாசத்தோடு கூடியிருந்த காலத்தில் மறைந்து கிடந்த அருட்சத்தியை, உன்னை ஆட்கொள்ளும்படி செய்யும் தீக்கையினாலே, ஆசிரியர் விளக்கியவுடன் அச் சத்தியோடு உடனாய் நின்று அருள்வழி ஒழுகுக.

15. எல்லாவகை உலகப் பற்றுக்களையும் அறுக்கவல்ல திருவருட்பற்றினைப் பற்றினால், அத்திருவருள் பிற பற்றுக் களை ஒழிக்கும். அங்ஙனம் பற்றொழியாது பாவிப்பதனால் இறைவன் வெளிப்படான்.

16. உலகப் பற்றிலழுந்தாது மெய்ப்பொருளை உணர் கின்ற யோகிகள், தொங்குகின்ற மணியின் நாவைப்போல ஒன்றினும் பற்றாமல் அசைவற நிற்பர்.

17. உள்ளத்துள்ளே இறைவரை நினைந்து அசைவற நிற்கும் யோகிகட்குத் திருச்சிலம்போசையாகிய நாத தத்துவம் தோன்றும். அதன் வழியே சென்று ஐந்தொழிலை நடாத்தும் இறைவனைக் கண்டு வணங்குக. அங்கிருந்து பிறழாமல் நேர்பட ஒழுகுக.

18. இறைவன் அருளை மறவாது நிற்பின், மயக்கமும் திரிபுணர்ச்சியும் தொலையும். அவ்வருளைப் பற்றி நிற்ப தொன்றே ஈண்டுச் செய்யற்பாலது.

19. அங்ஙனம் அருள்வழி உறைத்து நிற்பின் ஒப்பற்ற அருட்சத்தியின் கணவராகிய பெருமான் தன்னைக் கருது முன் சுட்டறிவு ஒழியும்படி அறிவிற் பதிந்து நிற்பன். அவன் பிற வழியால் நினைத்துப் பெற முடியாதவன் என்று அறிக.

20. இரவு பகலில்லா வின்ப வெளியூடே
விரவி விரவிநின் றுந்தீபற
விரைய விரையநின் றுந்தீபற.

21. சொல்லும் பொருள்களுஞ் சொல்லா தனவுமங்
கல்லனா யானானென் றுந்தீபற
அம்பிகை பாகனென் றுந்தீபற.

22. காற்றினை மாற்றிக் கருத்தைக் [1]கருத்தினுள்
ஆற்றுவ தாற்றலென் றுந்தீபற
அல்லாத தல்லலென் றுந்தீபற.

23. கள்ளரோ டில்ல முடையார் கலந்திடில்
வெள்ள வெளியாமென் றுந்தீபற
வீடு மெளிதாமென் றுந்தீபற.

24. எட்டுக்கொண் டார்தமைத் தொட்டுக்கொண் டேநின்றார்
விட்டா ருலகமென் றுந்தீபற
வீடேவீ டாகுமென் றுந்தீபற.

25. சித்தமுந் தீய கரணமுஞ் சித்திலே
ஒத்ததே யொத்ததென் றுந்தீபற
ஒவ்வாத தொவ்வாதென் றுந்தீபற.

26. உள்ளும் புறம்பும் நினைப்பறி னுன்னுள்ளே
மொள்ளா வமுதாமென் றுந்தீபற
முளையாது பந்தமென் றுந்தீபற.

---

(வே. பா.) 1. கருத்தினில்.

20. ஆணவத்தோடு கூடிய நிலையாகிய இரவும், மாயையுடன் கூடிய நிலையாகிய பகலும் இல்லாத தூய ஞானத்தோடு கூடிய இன்ப வழியிலே இடைவிடாது, வினைக்கு அஞ்சி விரைந்து சென்று பொருந்துக.

21. தன்னியல்பில், இறைவன், நூல்களால் பேசப்படும் பொருள்களும் பேசப்படாத பொருள்களும் அல்லாதவனாயிருந்தும், உயிர்களின் பொருட்டு அவையாய் நிற்கின்றான். அதற்குக் காரணம் அவன் கருணையாகிய சத்தியோடு கூடியிருத்தல் ஆகும்.

22. வெளிச்செல்லும் மூச்சுக்காற்றினை உள்ளே சென்று அடங்கும்படியாக மாற்றி, புறத்தே செல்லுங் கருத்தினைக் கருத்துக்குக் கருத்தாகிய கடவுள்பால் பதிவிப்பதே ஆற்றல் என்றறிக. பிற செயல்கள் துன்பந்தருவன ஆகும்.

23. சிவபெருமானாகிய கள்ளரோடு உடம்பாகிய வீட்டையுடைய உயிர் கலந்துவிட்டால் அதிலுள்ள சரக்காகிய வினைகளெல்லாம் அறவே ஒழியும். வீடும் எளிதாம் என்றறிக.

24. ஐம்பூதமும் மதியும் கதிரவனும் உயிரும் ஆகிய திருமேனிகள் எட்டுங் கொண்டாராகிய இறைவர் திருவடியை இடைவிடாது தொட்டுக்கொண்டே நின்றவர் உலகத்தை விட்டார் ஆவர். விட்ட இடத்தே அவர் திருவடியே வீடாமென்றறிக.

25. தன்னுணர்ச்சியும் கருவிகளினுணர்ச்சியும் திருவருளிலே அடங்கி ஒத்தநிலை ஏற்படுதலே வீடடைதற்கு ஒத்த நிலை என உணர்க. ஒவ்வாத நிலை வீட்டு நெறிக்குப் பொருந்தாத நிலை என்றுணர்க.

26. அகவழிபாடும் புறவழிபாடும் ஒழிந்த அகண்ட வழிபாட்டிலே உலவாத இன்பம் உண்டென்றறிக. அந்நிலையிலே பந்தம் முளையாது.

27. அவிழ விருக்கு மறிவுட னின்றவர்க்
கவிழுமிவ் வல்லலென் றுந்தீபற.
அன்றி யவிழாதென் றுந்தீபற.

28. வித்தினைத் தேடி முளையைக்கை விட்டவர்
பித்தேறி னார்களென் றுந்தீபற
பெறுவதங் கென்பெணே யுந்தீபற.

29. சொல்லு மிடமன்று சொல்லப் புகுமிடம்
எல்லை சிவனுக்கென் றுந்தீபற
என்றானா மென்[1] சொல்கோ முந்தீபற.

30. வீட்டி லிருக்கிலென் னாட்டிலே போகிலென்
கூட்டில்வாட் [2]சாத்திநின் றுந்தீபற
கூடப்ப டாததென் றுந்தீபற.

31. சாவிபோ மற்றச் சமயங்கள் புக்குநின்
றாவி யறாதேயென் றுந்தீபற
அவ்வுரை கேளாதே யுந்தீபற.

32. துரியங் கடந்தவித் தொண்டர்க்குச் சாக்கிரந்
துரியமாய் நின்றதென் றுந்தீபற
துறந்தா ரவர்களென் றுந்தீபற.

33. பெற்றசிற் றின்பமே பேரின்ப மாயங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
முளையாது மாயையென் றுந்தீபற.

---

(வே. பா.) 1. செய்கோ. 2. சார்த்தியென்.

27. தன்னுணர்ச்சி நழுவிப் போதற்குரிய ஞானநெறி நின்றவர்க்குத் துன்பம் அகன்றொழியும். அல்லாதவர்க்குத் துன்பம் அகலாது.

28. எவற்றிற்கும் வித்தாகிய திருவருளை நாடிப் பெற்றுப் பாசமுளையைக் கைவிட்டவர்கள் பேரன்பு மிகுந்தவர்களாவார்கள். பேரன்பைப் பெற்றபின் பெறுதற்குரியது யாது?

29. சிவனைக் கூடுகின்ற இடம் இன்னதென்று குறித்துச் சொல்ல முடியாது. அறிவாசான் உணர்த்த உணரும் ஞானமே அவனுக்கு எல்லை. அவ்வெல்லையைக் கூடினால் யான் எனதென்னும் செருக்கு அறும்.

30. இல்லறத்திலிருக்கினும் துறவறத்திற் புகுந்து அலைந்து திரியினும் ஞானமாகிய வாளினை உயிரின் பாதுகாப்புக்குத் துணையாகக் கைக்கொள்க. அங்ஙனங் கொள்ளாவிடின் வீடடைய முடியாது.

31, வீட்டினை நேராக அடைதற்குப் பயன்படாத வழி கூறும் பிற சமயங்களிற் புகுந்து நின்று, உயிர்க்குறுதியை இழத்தல் கூடாது. பிறசமய உரைகளை மெய்யென்று நம்புதல் கூடாது.

32, உலக உணர்ச்சியும் தன்னுணர்ச்சியும் கடந்த தொண்டர்க்கு நனவிலேயே தூய மேல்நிலை உணர்ச்சி நிகழும். அவர்களே உண்மைத் துறவிகள் என்றறிக.

33. அத்தகைய ஞானிகட்கு ஊழினால் எய்தும் சிற்றின்பம் திருவருட் கண்ணால் உணரப்படுவதாகலின் பேரின்பமாகவே முடியும். ஆதலால் மேல்வினையின் காரியமாக வரும் உடம்பெடுத்தல் நிகழாது.

34, பேரின்ப மான பிரமக் கிழத்தியோ
டோரின்பத் துள்ளானென் றுந்தீபற
உன்னையே [1]யாண்டானென் றுந்தீபற.

35. பெண்டிர் பிடிபோல ஆண்மக்கள் பேய்போலக்
கண்டாரே கண்டாரென் றுந்தீபற
காணாதார் காணாரென் றுந்தீபற.

36. நாலாய பூதமு நாதமு மொன்றிடின்
நாலா நிலையாமென் றுந்தீபற
நாதற் கிடமதென் றுந்தீபற.

37. சென்ற நெறியெல்லாஞ் செந்நெறி யாம்படி
நின்ற பரிசறிந் துந்தீபற
[2]நீசெயல் செய்யாதே யுந்தீபற.

38. பொற்கொழுக் கொண்டு வரகுக் குழுவதென்
அக்கொழு நீயறிந் துந்தீபற
அறிந்தறி யாவண்ண முந்தீபற.

39. அதுவிது வென்னா தனைத்தறி வாகும்
அதுவிது வென்றறிந் துந்தீபற
அவிழ்ந்த [3]சடையாரென் றுந்தீபற.

40. அவனிவ னான தவனரு ளாலல்ல
திவனவ னாகானென் றுந்தீபற
என்று மிவனேயென் றுந்தீபற.

---

(வே. பா.) 1. ஆண்டதென். 2. நீ சில. 3 சடையானென்.

34. அவர் பேரின்பமான பெருந்தலைவியோடு கூடி ஒப்பற்ற இன்பத்தை நுகர்ந்துகொண்டிருத்தலினாலே, அதன் கண் விளங்கும் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டுப் பிற இன்பத்தை உணரரார் என்றறிக.

35. பேய்க்கோட்பட்ட பெண்டிர்போல உயிரையும், பேய் போல நாயகனான கடவுளையும் கண்டறிந்தோர்களே கடவுளைக் கண்டவராவர். அங்ஙனம் தன்னை மறந்து திருவருட் பதிவுறாதவர்கள் குருடர்களே.

36. உடம்பினுள் பிராணனும் நாத கலையுங் கூடிச் சுழுமுனை வழியே உச்சியிற் சென்று சேரப்பெற்று அருள் வழியில் நிலையுறுவோரே நாலாம் நிலையாகிய வீட்டினை எய்துவர். அவ்வருள் வெளியே நாதனுக்கு இடமென்றறிக.

37. சென்ற வழியெல்லாம் சிவன்வழி என்ற உணர்ச்சி யோடு தன்செயலற்று நிற்கவேண்டும்.

38, பொன்னினாலமைந்த கொழுவைக்கொண்டு வரகு விளையும் நிலத்தில் உழுவதால் பயனென்? அக் கொழுப்போல் வதாய திருவருளின் தன்மையறிந்து உலக வாழ்விலே ஈடு படாமல் சுட்டற்ற நிலையில் நிற்கவேண்டும்.

39. சுட்டியறியாது பொருள்களையெல்லாம் ஒருங்கே யறியும் பேரறிவுடைய பெருமான் உயிரோடு கலந்து நின்று உதவுகிறானென்பதையறிந்து, அவனைச் சுட்டற்ற நிலை நின்று அறிய வேண்டுமென வுணர்க.

40. இறைவன் உயிரோடு கலந்தது தனது அருள் மிகுதி யால் என்க. தன்னியல்பின் அவன் உயிரின் வேறாவனாதலின், உயிர் இறைவனாய்விடுமென்ற கருத்தை விட்டொழிக. உயிர் முத்தியை யடைந்தாலும் உயிரேயென்றறி;

41. முத்தி [1]முதலுக்கே மோகக் கொடிபடர்ந்
தத்தி பழுத்ததென் றுந்தீபற
அப்பழ முண்ணாதே யுந்தீபற.

42. அண்ட முதலா மனைத்தையு முட்கொண்டு
கொண்டத்தைக் கொள்ளாதே யுந்தீபற
குறைவற்ற செல்வமென் றுந்தீபற.

43. காயத்துள் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே
மாயக்கள் ளுண்டாரென் றுந்தீபற
வறட்டுப் பசுக்களென் றுந்தீபற.

44. சிந்தையி னுள்ளுமென் சென்னியி னுஞ்சேர
வந்தவர் வாழ்கவென் றுந்தீபற
மடவா ளுடனேயென் றுந்தீபற.

45. வைய முழுது மலக்கயங் கண்டிடும்
உய்யவந் தானுரை யுந்தீபற
உண்மை யுணர்ந்தாரென் றுந்தீபற.

திருச்சிற்றம்பலம்

---

(வே. பா.) 1. முதற் கொடிக்கே.

41. முத்தி பெறுவதற்குரிய முதன்மையுடைய உயிரின் பால் ஆணவமான மயக்கக் கொடி படர்ந்து, உடம்பாகிய பழம் பழுத்துப் பிறவி ஏற்பட்டது. அது முத்திக்குப் பகையாகலின், அப் பழத்தை நுகர்தற்கிடமில்லாதபடி திருவருளிலே உறைத்து நிற்க.

42. எல்லாவகைப் படைப்பையுமுள்ளடக்கிய மாயையினைப் பற்றி நில்லாதே, அதற்கு மேலான பூரணப் பொருளாகிய சிவமே பற்றத்தக்கது.

43. உடம்பினுள் வாழும்போதே இறைஞானத்தின் பயனான பேரின்பத்தை நுகராது, உடம்பால் வரும் மயக்கமிக்க சிற்றின்பத்தை உண்டவர்கள் பயன்படாத உயிர்களென உணர்க.

44. திருவடி சென்னிமேற் சூட்டி மெய்ஞ்ஞானம் நல்கியும், உள்ளத்தாமரையில் ஞானபூசை யேற்றும் என்னை ஆட்கொள்ள வந்தவர் தமது திருவருட் சத்தியோடு வாழ்க.

45. உலகினர் யாவர்க்கும் பாசநீக்கத்தைச் செய்ய வல்ல உய்யவந்த தேவநாயனாரது நூலினை உணர்ந்தார் உண்மை உணர்ந்தாராவர்.

திருச்சிற்றம்பலம்

---

# மெய்கண்ட சாத்திரம்

மூலமும்

கா. சுப்பிரமணிய பிள்ளை

தெளிவுரையும்

திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார்

அருளிய

திருக்களிற்றுப்படியார்

# 2. திருக்களிற்றுப்படியார் மூலம்

1. அம்மையப்ப ரேயுலகுக் கம்மையப்ப ரென்றறிக
அம்மையப்ப ரப்பரிசே வந்தளிப்ப—ரம்மையப்பர்
எல்லா வுலகுக்கு மப்புறத்தா ரிப்புறத்தும்
அல்லார்போ னிற்பா ரவர்.

2. தம்மிற் றலைப்பட்டார் பாலே தலைப்பட்டுத்
தம்மிற் றலைப்படுத றாமுணரின்—தம்மில்
நிலைப்படுவ ரோரிருவர் நீக்கிநிலை யாக்கித்
தலைப்படுவர் தாமத் தலை.

3. என்னறிவு சென்றளவில் யானின் றறிந்தபடி
என்னறிவி லாரறிக வென்றொருவன்—சொன்னபடி
சொல்லக்கே ளென்றொருவன் சொன்னா
[னெனக்கதனைச்
சொல்லக்கே ணானுனக்கச் சொல்.

4. அகளமய மாய்நின்ற வம்பலத்தெங் கூத்தன்
சகளமயம் போலுலகிற் றங்கி—நிகளமாம்
ஆணவ மூல மலமகல வாண்டனன்காண்
மாணவக வென்னுடனாய் வந்து.

# 2. திருக்களிற்றுப்படியார் தெளிவுரை

1. சத்தி, சிவம் என இரு தன்மையுடைய ஒருவரே உலகுக்குத் தாயுந் தந்தையுமாவர், அவர் தமது அருட் சத்தியுடன் றோன்றிப் பக்குவப்பட்ட உயிர்கட்கு அருள் புரிவர். எல்லாவுலகங்களுக்கும் அப்பாற்பட்டவராதலின் உயிர்களெல்லாம் தமது முயற்சியாலே அறியக்கூடாதவர். அப்பாற்பட்டாலும் உலகங்களிற் கலந்து அவற்றிற் றுடக்குறாது நிற்பர்.

2. தம்மை யுய்விப்பான் எழுந்தருளிய அறிவாசான் சொல்வழி நின்று, தம்மறிவிலே சிவம் விளங்குவதையுணர்ந்தவர் தலைவனையும் தம்மையுமுணர்வர். அவர் தம்மை மறந்து தலைவனொடு பொருந்தி நிற்பின், தலைவன் தன்மையையடைவர்.

3. ஒரு பேராசிரியர் தன்பால் ஞான நூல் கேட்கவந்த மாணவர்களை நோக்கி, 'எனது பசுபோதங்கெட்டுச் சிவாநுபூதி நிலையில் நான் தெரிந்தபடி செருக்கற்ற நீங்கள் கேட்பீர்களாக' என்று உபதேசஞ்செய்த நூலினைக் கேட்ட எனது ஆசிரியர் எனக்குச் சொன்னபடியே நான் உனக்குச் சொல்லுகிறேன். நீ அதனைக் கேட்பாயாக.*

4. பரஞானமாகிய அருள் வெளியிலே நின்று பக்குவம் அடைந்த உயிர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும் கூத்தப்பிரான், என்னைப் பந்தப்படுத்தும் ஆணவமாகிய மூலமலம் என்னை விட்டொழியும்படி, அநாதியே உயிர்க்குயிராய் நின்று உண்மை அறிவித்தருளி, பக்குவ காலத்திலே ஆசிரியனாய்த் திருவுருக்கொண் டெழுந்தருளிவந்து ஆட்கொண்டனன். மாணவனே, நீ இதை அறிவாயாக.

---

*திருவியலூர் உய்யவந்த தேவநாயனார்பால் உபதேசம் பெற்ற ஆளுடைய தேவ நாயனார் தமக்கு உபதேசித்ததை இந்நூலாசிரியர் தமது மாணவருக்கு அறிவுறுத்துவதாகக் குறிப்பிக்கின்றார்.

5. ஆகமங்க ளெங்கே யறுசமயந் தானெங்கே
யோகங்க ளெங்கே யுணர்வெங்கே—பாகத்
தருள்வடிவுந் தானுமா யாண்டிலனே லந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு.

6. சாத்திரத்தை யோதினர்க்குச் சற்குருவின் றன்வசன
மாத்திரத்தே [1]வாய்க்குநலம் வந்துறுமோ—யார்த்தகடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகந் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாயிதனைச் செப்பு.

7. இன்று பசுவின் மலமன்றே இவ்வுலகில்
நின்ற மலமனைத்து நீக்குவதிங்—கென்றால்
உருவுடையா னன்றே யுருவழியப் பாயும்
உருவருள வல்லா னுரை.

8. கணடத்தைக் கொண்டு கரும முடித்தவரே
[2]யண்டத்தி னப்புறத்த தென்னாதே—யண்டத்தின்
அப்புறமு மிப்புறமு மாரறிவுஞ் சென்றறியும்
எப்புறமுங் கண்டவர்க ளின்று.

9. அன்றுமுத லாரேனு மாளா யுடனாகிச்
சென்றவர்க்கு மின்னதெனச் சென்றதிலை—யின்றிதனை
எவ்வா றிருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகேன்
அவ்வா றிருந்த தது.

(வே. பா.) 1. வாய்த்தவளம். 2. அண்டத்த.

5. அருள் வடிவுடைய மாதொரு பாகன் அன்பர்க்குத் தோன்றி மெய்யினை அறிவுறுத்தாவிடின், சிறந்த சமய நூல்கள் எவ்வாறு உளவாகும், ஆறு வகைப்பட்ட சமய ஒழுக்கங்கள் எவ்வாறு தோன்றும்? அவற்றின் பயனான யோக முயற்சியும் ஞானமும் எங்ஙனம் விளையும்? இறைவன் இங்ஙனம் வந்து உணர்த்தாதவிடத்து அவன் பேரியல்பை யார் தானாக அறிய முடியும்?

6. மெய்ந்நூல் கற்றார்க்கு ஆசிரியன் அறிவுரை மாத்திரத்திலே உளதாகும் பெரும்பயன் விளையுமோ? கடல் நீர் குடித்தவர்க்கு விடாய் தணியாது. முகில் நீரை மொண்டு மழையாக நன்னீர் பொழிந்தால், அஃதே பயன்படும். அது போல அனுபவப் பயனை அறிவாசான் விளக்கினா லொழிய அறிய முடியாது.

7. மலமெல்லாம் நாற்றமுடையவாயினும் புனித மமைந்த பசுவின் மலமாகிய சாணம் பிற மலங்களனைத்தை யும் நீக்கும். அதுபோல ஆசிரியனும் மக்களுள் ஒருவன் எனி னும், சிவன் அவனை நிலைக்களமாகக் கொள்ளுதலினால், அவன் பிறவியை ஒழிக்க வல்லவன் ஆவன் என்றறிக.

8. ஆசிரியனாய் வந்த கடவுள் நல்கிய ஞானத்தைக் கொண்டு நிட்டைநிலை கைகூடப்பெற்றவர், இறைவனை உலகிற்கு அப்பாற்பட்டவன் என்று கூறாமல், உலகெங் கணும், உயிர்கள் யாவற்றினும் அவன் கலந்து நிற்கும் நிலையை அனுபவத்தாற் கண்டவராவர். (மெய்யுணர்வுடை யோர் இறைவனை அகண்டமாகக் கண்டு வழிபடுவார் என்பது கருத்து.)

9. அயனரி முதலிய தலைவர்களுக்கும் இறைவன் றன்மை தெரிந்ததில்லை. அவனை அனுபவத்தா லுணர்ந்த வர்க்குந் தமது அனுபவம் எவ்வாறெனத் திட்பமாகக் கூற முடியாது. வினவுவார்க்கு அது அநுபவித்தவாறு இருந்தது என்பதே அவர்களால் கூறமுடியும்.

10. ஒன்றுங் குறியே குறியாத லாலதனுக்
கொன்றுங் குறியொன் றிலாமையினா—லொன்றோ
டுவமிக்க லாவதுவுந் தானில்லை யொவ்வாத்
தவமிக்கா ரேயிதற்குச் சான்று.

11. ஆற்றா லலைகடற்கே பாய்ந்தநீ ரந்நீர்மை
மாற்றியவ் வாற்றான் மறித்தாற்போற்—றோற்றிப்
புலன்களெனப் போதம் [1]புறம்பொழியி னந்தம்
மலங்களற மாற்றுவிக்கும் வந்து.

12. பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதுங்
காலனையன் றேவிக் கராங்கொண்ட—பாலன்
மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தங்
கரணம்போ லல்லாமை காண்,

13. தூங்கினரைத் தூய சயனத்தே விட்டதற்பின்
றாங்களே சட்டவுறங்குவர்க—ளாங்கதுபோல்
ஐய னருட்கடைக்க ணாண்டதற்பி னப்பொருளாய்ப்
பைய விளையுமெனப் பார்.

14. உள்ள முதலனைத்து மொன்ற [2]வொருவவரில்
உள்ள முருகவந் துன்னுடனாந்—தெள்ளி
உணருமவர் தாங்க ளுளராக வென்றும்
புணருமவ னில்லாப் பொருள்.

---

(வே. பா) 1. புறம்பொழியும். 2. உருகவரில்.

10. சார்ந்த பொருளில் அதுவதுவாய் நிற்குந் தன்மை உயிர்க்குளது. அத்தகைய உயிர் முடிபாகச் சாரும் தன்மையின் வைத்து இறைவன் தன்மை துணியப்படுவதன்றி உலகிலுள்ள பிற எப்பொருளில் வைத்தும் அவனை அறியமுடியாது. ஏனெனின், எப்பொருளும் இறைவனுக்கு உவமையாவதில்லை. முடிபாகச் சாருந் தன்மை தவமிக்கோர்பால் காணப்படும்.

11. ஆற்று நீர் கடல் நீரோடு கலந்தபின், மீண்டும் ஆற்றிலே எதிர்த்து வரின் அது கடல் நீரின் தன்மையுடையதாம். அது போலச் சிவானுபூதிமான்கள் உடலிலே தங்கினும், புலன் வசப்படார்; சிவன் வயப்பட்டிருப்பர். அன்னோர் வாயிலாக இறைவன் நமது மலங்களைக் களைந்தொழிப்பன்.

12. சிவஞானிகளுக்குக் கரணங்களெல்லாம் சிவகரணமாய்த் திரிபுற்றமை,பாலைநிலம் நெய்தலாகும்படி திருஞானசம்பந்தப் பெருமான் பாடியதும், அப்பர்பிரான் பாம்பு விடம் நீங்கும்படி பாடியதும், முதலைவாய்ப் பாலனைச் சுந்தரமூர்த்தி நாயனார் அழைத்ததும்பற்றி யுணர்ந்துகொள்க.

13. இறைவன் குருவாகி யெழுந்தருளியாட் கொள்ளுமுன்னமேயே அருள் வீழ்ச்சியினால் பக்குவமிக்க உயிர்கள், இறைவன் திருவருட் கடைக்கண் பாலித்து ஆண்டபின்னர், சிவமாந்தன்மையைத் தாமே மெல்ல மெல்ல எய்திவிடுவர். அது தூக்கமிக்காரைப் படுக்கையில் விட்டபின், உறக்கத்தை மற்றவர்கள் அவர்களுக்குக் கொடுப்பதில்லாமல் அவர்களே நன்றாகத் தூங்கிவிடுவதைப்போலும்.

14. தன்னுணர்ச்சியோடு ஆராய்ந்து தெளிய முயன்றால், இறைவன் முன்னிற்கமாட்டான். உள்ளமலங்களெல்லாம் ஒடுங்கி அழியும்படி தம்மை மறந்து அன்புசெயின் உள்ளம் உருகும்படியாக இறைவன் உடன் கலப்பன்,

15. நல்லசிவ தன்மத்தா னல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தா னானழியும்—வல்லதனால்
ஆரேனு மன்புசெயி னங்கே தலைப்படுங்காண்
ஆரேனுங் காணா வரன்.

16. மெல்வினையே யென்ன [1]வியனுலகு ளோர்க்கரிய
வல்வினையே யென்ன வருமிரண்டுஞ்—சொல்விற்
சிவதன்ம மாமவற்றிற் சென்றதிலே [2]செல்வார்
பவகன்ம நீங்கும் படி.

17. ஆதியை யர்ச்சித்தற் கங்கமு மங்கங்கே
தீதில் திறம்பலவுஞ் செய்வனவும்—வேதியனே
நல்வினையா மென்றே நமக்குமெளி தானவற்றை
மெல்வினையே [3]யென்றதுநாம் வேறு.

18. வரங்கடருஞ் செய்ய வயிரவர்க்குத் தங்கள்
கரங்களினா லன்றுகறி யாக்க—இரங்காதே
கொல்வினையே செய்யுங் கொடுவினையே யானவற்றை
வல்வினையே யென்றதுநா மற்று.

19. [4]பாதக மென்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டுஞ் – சேதிப்பக்
கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
தண்டீசர் தஞ்செயலாற் றான்.

20. செய்யி லுகுத்த திருப்படி மாற்றதனை
ஐய விதுவமுது செய்கென்று—பையவிருந்
தூட்டி யறுத்தவர்க்கே யூட்டியறுத்தவரை
நாட்டியுரை செய்வதென்னோ நாம்.

---

(வே. பா.) 1. வியனுள்ளார் கட்கரிய : வியனுலகில் ஆற்றரிய.
2. செல்வாய். 3. என்றது நான். 4. பாதகமேயென்றும்.

15. பயன்கருதாது கைக்கொள்ளும் சிவனறமாகிய சரியை கிரியைகளில் நின்றாதல், நல்ல சிவயோகத்தினாலாதல், நல்ல சிவஞானத்தினாலாதல், யானென்னுந் தன்னுணர்ச்சி கெடும்படியாக யாராவது அன்புசெயின் யாருங் காண முடியாத பெருமான் வெளிப்பட்டுத் தோன்றுவன்.

16. சிவனறமென்பது, மெல்வினையும் நிலவுலகத்தார் ஆற்றுதற்கரிய வல்வினையும் என இருவகைப்படும். பிறவிக்கு ஏதுவாய வினை நீங்கும்படி, அவ்விரண்டனுள் உனக்குப் பொருந்தியதொன்றை நீ கடைப்பிடிக்க.

17. முதல்வனை வழிபடற்குத் துணையாவன இயற்றுவதும், பல்வகையாக அவனை வழிபடுவதும் எளிதாகச் செய்யக்கூடியவை என்னும் காரணத்தால், அவற்றை மெல்வினையென யாம் செப்பியதென்றறிக.

18. வரங்களைத்தரும் வயிரவ வேடங்கொண்டு வந்த பெருமானுக்குச் சிறுத்தொண்டர், தமது கரங்களினாலே கறியாக்கும் பொருட்டுச்செய்த கொடுவினையாய பிள்ளைக் கொலை முதலியவற்றையே வல்வினையென்றேம்.

19. பாவமென்றும் பழியென்றும் பாராதே, அந்தணனாகிய தந்தையின் தாளினைச் சண்டேசுரர் சேதித்த போது இறைவன் தானாகின்ற தன்மையை அவர்க்களித்தான்.

20. வயலிலே கமரிற் சிந்திப்போன கட்டளைப் பொருளாகிய செந்நெலரிசி, செங்கீரை, மாவடு என்பனவற்றைச் சிந்திய விடத்திலேயே இறைவன் அமுது கொண்டருளும் பொருட்டுத் தனது ஊட்டியையரிந்த அரிவாட்டாய நாயனார், பெருமானுக்கு அமுதும் ஊட்டித் தமது பிறவியையும் அறுத்தனர், அவரை வல்வினைக்கு எடுத்துக்காட்டாகக் கூறுவதொழிய வேறு எவ்வாறு அவர் பெருமையை எடுத்துப் பேசுவது?

21. செய்யுஞ் செயலே செயலாகச் சென்றுதமைப்
பையக் கொடுத்தார் பரங்கெட்டா—ரையா
உழவுந் தனிசு மொருமுகமே யானால்
இழவுண்டோ சொல்லா யிது,

22. ஆதார யோகம் நிராதார யோகமென
மீதானத் தெய்தும் விதியிரண்டே—யாதாரத்
தாக்கும் பொருளாலே யாக்கும் பொருளாமொன்
றாக்காப் பொருளேயொன் றாம்.

23. ஆக்கி யொருபொருளை யாதாரத் தப்பொருளை
நோக்கி யணுவி லணுநெகிழப்—பார்க்கில்
இவனாகை தானொழிந்திட் டேகமா மேகத்
தவனாகை யாதார மாம்.

24. கொண்ட தொருபொருளைக் கோடிபடக் கூறுசெயிற்
[1]கொண்டதுவு மப்பரிசே கூறுபடுங்—கொண்ட
இருபொருளு மின்றியே யின்னதிது வென்னா
தொருபொருளே யாயிருக்கு முற்று.

(வே. பா.) 1. கொண்டமனும்.

21. தாம் அளவற்ற பேரன்பினாலே செய்யுஞ் செய்கையைச் சிவன் பொருட்டுச் செய்யுமுகத்தானே தம்மையும் அவனுக்கே மெள்ளக் கொடுத்துத் தற்போதமிழந்தவர்களே வல்வினையாளர். தன்னுணர்ச்சியற்றுத் தன் செயலைச் சிவன் செயலாக்கிவிடவே, கொடுவினையாகத் தோன்றுஞ் செயல் பெரும் புண்ணியமாயிற்று. கடன் கொடுத்தவர்க்கே, கடனாளி தன் வேலையை உரியதாக்கிவிட்டால், கடனுந் தீர்ந்து தன் நிலத்தையும் பெற்றவனாதல்போலத் தன் செயலை இறைவனுக்கு உரியதாக்கிவிட்டால், கொடுவினையாகிய பாவமும் நீங்கிப் புண்ணியமும் உள்ளதாகும்.

22. ஆதாரயோகமென்றும் நிராதாரயோகமென்றும் யோகம் இருவகைப்படும். அவை இரண்டும் மேலான நிலையாகிய திருவடியின்கண் சேர்ப்பிக்கும். ஆதாரயோகம் திருவுருவ வழிபாடாகும், அதாவது, உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்களிலே பெருமானின் பல்வகைத் திருமேனிகளை நினைந்து பேரன்பால் வழிபட்டு ஒற்றுமையுறுதல். நிராதாரயோகம் அகண்டமான பெருமானை அருள் வெளியிலே நினைந்து அவனோடு ஒன்றுதலாகும்.

23. உடம்பினுள் ஆறு ஆதாரத்திலொன்றில் இறைவனது திருமேனியை ஆசிரியன், காட்டிய முறையிற் கற்பித்து அதனை எண்ண எண்ணத் தன்னுணர்ச்சியானது கற்பித்த நுண்ணிய வடிவத்தில் மறைந்தொழிய அவ்வடிவொன்றுமே தோன்றும். பின்னர் அவ்வடிவுதானாகவே தோன்றப் பெறுதலாகிய யோகமே ஆதார யோகமாம்.

24. நினைப்பிற் கொண்டதொரு இறைவடிவத்தைக் கோடி பங்கில் ஒன்றாக நுண்ணியதாக எண்ணி நினைந்தால், நினைக்கின்றவனும் அத்துணை நுண்ணிய நிலையடைவன். பின்னர் நினைப்பான், நினைபொருளென்ற உணர்ச்சியும், செய்வது இன்னது என்ற உணர்ச்சியும் ஒழியவே நினைத்த ஒருபொருளே முழுதுமாயிருக்கும்.

25. ஆக்கப் படாத பொருளா யனைத்தினிலுந்
தாக்கித்தா னொன்றோடுந் தாக்காதே—நீக்கியுடன்
நிற்கும் பொருளுடனே நிற்கும் பொருளுடனாய்
நிற்கை நிராதார மாம்.

26. அஞ்செழுத்து மேயம்மை யப்பர் தமைக் காட்டுதலால்
அஞ்செழுத்தை யாறாகப் பெற்றறிந்தே – யஞ்செழுத்தை
யோதப்புக் குள்ள மதியுங் கெடிலுமைகோன்
கேதமற வந்தளிக்குங் கேள்.

27. காண்கின்ற தோர்பொருளைக் காண்கின்ற யோகிகளே
காண்கின்றார் காட்சியறக் கண்ணுதலைக்—காண்கின்றார்
காண்பானுங் காணப் படும்பொருளும் [1] இன்றியே
காண்கையினாற் கண்டனரே காண்.

28. பேசாமை பெற்றதனிற் பேசாமை கண்டனரைப்
பேசாமை செய்யும் பெரும்பெருமான் – பேசாதே
எண்ணொன்றும் வண்ண மிருக்கின்ற யோகிகள்பா
லுண்ணின்றும் போகா னுளன்.

29. ஓட்டற்று நின்ற வுணர்வு பதிமுட்டித்
தேட்டற்று நின்ற விடஞ்சிவமாம்—நாட்டற்று
நாடும் பொருளனைத்து நானா விதமாகத்
தேடுமிட மன்று சிவம்.

---

1. அன்றியே.

25. ஓங்காரமாய ஐந்தெழுத்தே உமையொருபாகனாகிய பெருமானைக் காட்டவல்லதாகலின், அவ்வைந்தெழுத்து ஆறு ஆதாரங்கட்கு அடிப்படையாய் நிற்கிற முறையையறிந்து, அம் மந்திரத்தின் நுண்பொருளை அறியப் புகுந்து, தன்னுணர்வு கெட்டால் உமை மணவாளன், மலமகல வந்தருளுவன்.

26. கற்பனை கடந்த பொருளாய் எல்லாப் பொருளிலுங் கலந்துங்கலவாது, உயிரின் உய்திக்கு மாறாய பொருளை அகற்றி, தன்னை நீங்காது உடன் நிற்கும் அருட்சத்தியோடு கூடிய பெருமானோடு வேற்றுமையற நிற்றல் நிராதாரயோகமாகும்.

27. ஞானக்கண் கொண்டு இறைவனைக் காண்கின்ற யோகிகளே, அவனைச்சுட்டிறந்த நிலையிற் காண்கின்றார்கள். தான் அவனென வேறுபடுத்தறியாது அவனைக் காண்கின்றவர்களே உள்ளபடி அவனைக் கண்டோராவர்.

28. நிராதாரயோகம் நிலைபெறும்படி பேசாமையாகிய மௌனம் கைக்கொள்ளலாம். மௌனமாயிருக்கின்ற முறையை ஆசிரியன்பாற் பெற்றறிந்து அம்முறையாலே மனமானது புலன்களிற் செல்லாமையைத் தலைப்பட்டவர்க்கு இறைவன் பிறவியை அறுத்தருள்வன். மௌனமாய் நினைவு இறைவன்பாலொன்றுபடும்வண்ணம் யோகத்திருப்பவருடைய உள்ளத்தினின்றும் அவன் புறத்தே செல்லானென அறிக.

29. ஓடியாடாதே அசைவின்றி முதல்வனை அறிகின்ற அறிவினைத் தலைப்பட்டு, அவனைத் தேடுதலில்லாது, நின்ற இடத்தே சிவம் வெளிப்படும். உலகிற்பொருந்தி விரும்பிய பொருள்களையெல்லாம் பல்வகையாகத் தேடுவதுபோலத் தேடுமிடத்தே சிவம் விளங்காது.

30. பற்றினுட் பற்றைத் துடைப்பதொரு பற்றறிந்து
பற்றைப் பரிந்திருந்து பார்க்கின்ற—பற்றதனைப்
பற்றுவிடி லந்நிலையே தானே பரமாகும்
[1]அற்றமிது சொன்னே னறி.

31. உணராதே யாது முறங்காதே யுன்னிற்
புணராதே நீபொதுவே நிற்கி—லுணர்வரிய
காலங்கள் செல்லாத காத லுடனிருத்தி
காலங்கள் மூன்றினையுங் கண்டு,

32. அறிவறிவாய் நிற்கி லறிவுபல வாமென்
றறிவி னறிவவிழ்த்துக் கொண்ட—வறிவினராய்
வாழ்ந்திருப்பர் நீத்தோர்கள் மானுடரின் மாணவகா
தாழ்ந்தமணி நாவேபோற் றான்.

33. ஓசையெலா மற்றா லொலிக்குந் திருச்சிலம்பின்
ஓசை வழியேசென் றொத்தொடுங்கி—லோசையினில்
அந்தத்தா னத்தா னரிவையுட னம்பலத்தே
வந்தொத்தா னத்தான் மகிழ்ந்து.

34. *சார்புணர்ந்து சார்பு கெடவொழுகி னென்றமையாற்
[2]சார்புணர்த றானே தியானமுமாஞ்—சார்பு
கெடவொழுகி னல்ல சமாதியுமாங் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று.

---

* குறள். மெய்யுணர்தல். ௧.

(வே. பா.) 1. மற்றுமித சொன்னேன். 2. சார்புணர்வு தானே.

30. பற்றுக்களில் விடுதற்கரிய பாசப்பற்றினைத் துடைத்தொழிக்கும் ஒப்பற்ற கருணைப் பரம்பொருளை யறிந்து பற்றி, அதனைப் பிரிந்து தன்னை வேறாகப் பார்க்கின்ற பற்றையும் அறவே கைவிட்டால், அந்நிலையிலேயே சிவம் தானே விளங்கும். இதனை நன்றாக உணர்வாயாக.

31. உலகப் பொருள் எதனையும் அறிந்து பற்றாதே: உலகப் பொருள்களின் வேறாக நின்னைக் கண்டபோது எழும் நான் பிரமமென்னு மயக்கத்திலழுந்தாதே. கடவுளையும் ஆராய்ந்து அறிந்துவிடலாமென்று எண்ணாதே. எவற்றிற்கும் பொதுவாய் நிற்குந் திருவருளோடு ஒன்றிநில். காலங்களைக் கடந்ததாய்க் காலவடிவமான பெருமானோடு கால மூன்றினையும் அவனுக்கு வேறென்றறிந்து நிற்க.

32. தனது அறிவையே அறிந்து பற்றி நிற்பின், அது அசத்துப் பொருள்களிற் பற்றிப் பலவகைப்பட்டு ஒருமையுறாமையின், அறிவுக்கறிவாய இறை ஞானத்திற் றன்னறிவு அடங்கப்பெற்று அப்பேரறிவின்கண் உளதாம் சிவானந்தத்தை நுகர்ந்து, தொங்குகின்ற மணியின் நாவேபோல். உலகப் பற்றின்றி வாழ்பவர்களே மனிதருள் துறந்தவராவர்.

33. உலகப் பற்றுக்கு ஆதாரமாய சுட்டறிவினை விளைக்கும் நால்வகைச் சொற்கள் காரணமாக வரும் ஓசைகளெல்லாம் அற்றால், நாத கலையாய முதல்வனது திருச்சிலம்பொலி கேட்கும். அதன்றன்மையையுணர்ந்து சென்றால், அது முடிந்தவிடத்தே சத்தியொடு கூடிய சிவம் விளங்கும்.

34. ஆசிரியர் திருவள்ளுவனார் 'சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின்' என்றருளிச் செய்தமையால், சிவஞானத்தைக் கூடி நிற்றலே சிவ நினைவாம். அச்சிவத்தை நினைக்கிறோமென்ற தன்னுணர்ச்சி கெட்டுவிடின் அதுவே நிட்டை கூடலாம். அந் நிட்டை கைகூடப் பெற்றால், பிறவிக்கு ஏதுவாய வினைப்பற்று ஏற்படாது.

35. அன்றிவரு மைம்புலனு நீயு மசையாதே
நின்றபடி யேநிற்க முன்னிற்குஞ்—சென்று
கருதுவதன் முன்னங் கருத்தழியப் பாயும்
ஒருமகடன் கேள்வ னுனக்கு.

36. உண்டெனி லுண்டாகு மில்லாமை யில்லையெனில்
உண்டாகு மானமையி [1]லோரிரண்டா—முண்டில்லை
என்னு மிவைதவிர்ந்த வின்பத்தை யெய்தும்வகை
உன்னிலவ னுன்னுடனே யாம்.

37. தூல வுடம்பாய முப்பத்தோர் தத்துவமும்
மூல வுடம்பா முதனான்கு—மேலைச்
சிவமாம் பரிசினையுந் தேர்ந்துணர்ந்தார் சேர்ந்த
பவமாம் [2]பரிசறுப்பார் பார்.

38. எத்தனையோ தத்துவங்க ளெவ்வெவகோட் பாடுடைய
அத்தனையுஞ் சென்றங் களவாதே—சித்தமெனுந்
[3]தூதுதனைப் போக்கிப்போய்த் தூக்கற்ற சோதிதனிற்
பாதிதனைக் கும்பிடலாம் பார்.

---

1. ஒன்றிரண்டாம். 2. துரிசறுப்பார். 3. தூதுவனைப் போக்கிற்.

**35.** பண்டு தொட்டு உன்னைக் கவர்ந்து மேற்செல்லும் ஐம்புலனைப் பற்றி அவற்றோடு அலமராதே. அவற்றின் வேறாக நீ நின்றபடி நின்றால், நீ பற்ற நினைப்பதன்முன், அருட் சத்தி உன்னை விரைந்து பற்றவே, முதல்வனும் தன் னுணர்ச்சி கெடும்படியாகத் தோன்றி முன் நிற்பன்.

36. உயிரறிவினாற் றேடிப் பெறுதல் கூடுமென்ற கருத் தோடு சென்றால், இறைவன் தோன்றானாதலின், அது கூடா தென்பதே முடியும். அவனையறிதலே யியலாதென்ற கருத் தினைப் பற்றின் அவனை அருளாலறியும் முயற்சியின்மை யின், அது கை கூடாதென்பதே முடியும். ஆதலின், உண்டு இல்லையென்ற இருகருத்துமின்றி இறை ஞானத்தால் அவனைக் கூட விரும்பியவிடத்தே அவன் உன்னோடுட னாய்த் தோன்றி யாட்கொள்ளுவன்.

37. உயிர்க்கு ஐந்துடம்பாயமைந்த அசுத்தமாயை முதல் நிலமீறாகவுள்ள முப்பத்தொரு முதலும், அறிவின் மூல மாய நால்வகைச் சொற்கேதுவாய தூய முதல் சுத்த தத்து வம் நான்கும், இவற்றிற்கெல்லாம் அடிப்படையான நாத தத் துவமாகிய சிவ முதலும், ஆகிய முப்பத்தாறும் உயிரின் வேறாய சடமெனவும், இவை தோன்றி யொடுங்கு முறை யீதெனவு முணர்ந்தால், அவ்வுணர்ச்சியுடையோரே பிறவி யறுக்கும் வகையறிந்தவராவர்.

38. அளவற்ற சமயக் கோட்பாடுகளையும் அன்னோர் கூறும் உண்மைகளையும் ஆராய்ந்து பார்த்து நேரம் போக்காது, உலகப் பொருள்களிற் செலுத்தும் சித்தமாகிய தூதுவனைத் தொலைத்து ஞானத்தை நாடிச்சென்றால் ஆராய்ச்சியைக் கடந்த அருட் சத்தி கூறனாகிய முதல்வனைக் கண்டு கும்பிடலாம்.

39. சாம்பொழுதி லேதுஞ் சலமில்லை செத்தாற்போல்
ஆம்பொழுதி லேயடைய வாசையறிற்—சோம்பிதற்குச்
சொல்லுந் துணையாகுஞ் சொல்லாத தூய்நெறிக்கட்
செல்லுந் துணையாகுஞ் சென்று.

40. *வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை யென்றமையால்
வேண்டினஃ தொன்றுமே வேண்டுவது—வேண்டினது
*வேண்டாமை வேண்டவரு மென்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டுமவன் பால்.

41. அரண வுணர்வுதனி லவ்வுணர்வை மாற்றிற்
கரணமுங் காலுங்கை கூடும்—புரணமது
கூடாமை யுங்கூடும் கூடுதலுங் கூட்டினுக்கு
வாடாமை யுங்கூடும் வந்து.

42. இன்றிங் கசேதனமா மிவ்வினைக ளோரிரண்டுஞ்
சென்று தொடருமவன் சென்றிடத்தே—என்றுந்தான்
தீதுறுவ னானாற் [1]சிவபதிதான் கைவிடுமோ
மாதொருகூ றல்லனோ மற்று.

43. அநாதி சிவனுடைமை யாலெவையு மாங்கே
அநாதியெனப் பெற்ற வணுவை—யநாதியே
ஆர்த்த துயரகல வம்பிகையோ டெவ்விடத்துங்
காத்த லவன்கடனே காண்.

---

* திருக்குறள். அவாவறுத்தல். உ. 1. சிவாபதி.

39. சித்த விகாரக் கலக்கமொழிந்த பெரியார்க்கு உடல் நீங்குங் காலத்தே யாதொரு கலக்கமுமில்லை. உடலோடுள்ள போதே பற்றுவிட்டமையாற் செத்தாற் போன்ற நிலையடைதலின், சும்மாவிருத்தலாகிய சாதன நெறியும் ஏற்பட்டுச் சொல்லிலடங்காத ஞானநெறியிற் செல்லுதற்கும் அது துணையாமென அறிக.

40. ஆசிரியர் திருவள்ளுவனார் விரும்புமிடத்துப் பிறவாமையை விரும்புக, என்று கட்டளையிட்டமையால், அஃது ஒன்றுமே விரும்பற்பாலது. பிற எவையும் விரும்பத் தக்கனவல்ல. அப் பிறவாமை அவாவின்மையை விரும்பின் தானே வந்தெய்து மென்றமையால் நாம் வேண்டத்தக்க முதல்வனிடத்தே அவாவறுத்தலை வேண்டுக.

41. பாதுகாப்பான திருவடி ஞானத்தைப் பெற்ற இடத்தே அதன்கண் நிலைபெறவேண்டும். சற்று அதனை விட்டு உலகை நோக்கின், அந்தக்கரணத் தொடர்பும், பிராண வாயுத் தொடர்பும் ஏற்படும். அன்றியும் இறைவனது முழுத் தன்மையை அனுபவியாமையும் ஏற்படும். அதனால் உடம்பு நீங்காமையும் உண்டாகும்.

42. பிறிதோருடம்பு வந்துற்றபோது இருவினைகளுஞ் சென்று பற்றும். அவற்றால் உடம்பு பெற்ற ஞானி தீங்கடைவனோவென்னில், அருட்சத்தி கூறனாய பெருமான் அவனைக் கைவிடமாட்டான். விட்ட குறையை முடித்து வீடடைவிப்பான்.

43. எஞ்ஞான்றும் எல்லாம் சிவனுடைமையாதலினால் எஞ்ஞான்றும் இருப்பதாய உயிரைத் தொடக்கமற்ற காலம் வருத்திய துயரத்தை எவ்விடத்திலும் நீக்கிக் காப்பது அருளன்னையுடன் கூடிய அப்பனது கடனாகும்.

44. தம்மிற் சிவலிங்கங் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன்பால் மஞ்சனநீர் தாமாட்டித்—தம்மையொரு
பூவாக்கிப் பூவழியா மற்கொடுத்துப் பூசித்தால்
ஓவாமை யன்றே யுளன்.

45. தன்னைப் பெறுவதன்மேற் பேறில்லைத் தானென்றுந்
தன்னைத்தான் பெற்றவன்றா னாரென்னில் — [தன்னாலே
எல்லாந்த னுட்கொண்டு கொண்டதனைக் கொள்ளாதே
எல்லாமாய் நிற்கு மிவன்.

46. துன்பமா மெல்லாம் பரவசனாய்த் தான்றுவளில்
இன்பமாந் [1]தன்வசனா யேயிருக்கி—லென்பதனால்
நின்வசனா யேயிருக்கின் நின்னுடனாம் நேரிழையாள்
தன்வசனா யேயிருப்பன் றான்.

47. செத்தாரே கெட்டார் கரணங்கள் சேர்ந்ததனோ
டொத்தாரே யோகபர ரானவர்க—ளெத்தாலும்
ஆராத வக்கரணத் தார்ப்புண்டிங் கல்லாதார்
பேராமற் செல்வரதன் பின்.

48. கண்ணுங் கருத்துங் கடந்ததொரு பேறேயுங்
கண்ணுங் கருத்துங் களிகூர— நண்ணி
வடமடக்கி நிற்கும் வடவித்தே போல
உடனடக்கி நிற்பர்கள்கா ணுற்று.

---

(வே. பா.) 1. தன்வசனாய்த் தானிருக்கில்.

44. உயிரின்கண்ணே சிவவடிவமாகிய ஞானத்தைக் கண்டு வணங்கிச் சிவபெருமானுக்கு அன்பு நீரால் திருமஞ்சன மாட்டித் தன்னை அவனுக்கு வாடாத ஒரு மலராகச் சாத்தி வழிபட்டால் உடல் மீண்டும் எடுத்தலாகிய பிறவியறும்.

45. தன்னைப் பெறுவதைப் பார்க்கிலும் சிறந்த பேறு இல்லையென்ப. எப்பொழுதும் தன்னைப் பெற்றவன் யார் என்றால், பாசத்தை அறிந்ததுபோலச் சிவத்தைத் தன்னறி வின்கண்ணே கண்டு, பற்றிய பாசப்பிணிப்பற்று இறைவ னோடு கலந்து அகண்டமாய் நிற்கப்பெற்றவனே யென வுணர்க.

46. எல்லாப் பொருளையும் பற்றித் தம் வயமிழந்தால் துன்பமாம், தம் வயமுடைமையாலின்பமாம் என்ற கருத்தை யாராய்ந்து நின் வசமாயிருப்பின், திருவருட்சத்தி மயமாய் நிற்கும் பெருமான், உன்னுடனேயிருந்து உனக்கின்பமளிப் பன்.

47. அந்தக்கரணத் தொடர்பு அற்றவரே பிறவியற்று முடிவாகிய இறப்பெய்தினவர்கள். தன்னைச் சேர்ந்த திரு வருட்சத்திவழி நிற்பவரே யோகத்திற் றுறைபோகிய மேலோர். எல்லா வகையாலும் நிரம்பாத் தன்மையுடைய கரணங்களிற் கட்டுண்டு திருவருள் வயம் நில்லாதவர் அக் கரணங்கள் செல்லும் வழியெல்லாஞ் செல்வர்.

48. கண் போன்ற புறக்கருவிகளாலும், மனம் போன்ற அகக் கருவிகளாலும் அறிதற்கரிய கடவுளை மனமும் கண்ணுங் களிகூரும்படி காணப்பெற்று, பெரிய ஆலமரத்தைத் தன்னகத்தடக்கிநிற்கும் வித்தேபோல அவரைப் பேரறி ஞராய சிவனடியார்கள் தங்கள் அறிவகத் தடக்கிநிற்குந் தன்மையர் என அறிக.

49. வானகமு மண்ணகமு மாய்நிறைந்த வான்பொருளை
ஊனகத்தே யுன்னுமதெ னென்றனையேல்—[1]ஏனகத்து
வாதனையை மாற்றும் வகையதுவே மண்முதலாம்
ஆதனமே யன்றோ வதற்கு.

50. கல்லிற் கமரிற் கதிர்வாளிற் சாணையினில்
வல்லுப் பலகையினில் வாதனையைச் — சொல்லும்
அகமார்க்கத் தாலவர்கண் மாற்றினர்கா ணையா
சகமார்க்கத் தாலன்றே தான்.

51. உள்ளும் புறம்பும் நினைப்பொழியி லுன்னிடையே
வள்ள லெழுந்தருளு மாதினொடுந்—தெள்ளி
அறிந்தொழிவா யன்றியே யன்புடையை யாயிற்
செறிந்தொழிவா யேதேனுஞ் செய்.

52. *கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை யென்றமையாற்
கண்ணப்ப னொப்பதோ [2]ரன்பதனைக் — கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறித லல்லதுமற்
[3]றியாமறியு மன்பன் றது.

53. அவிழ்ந்த துணியி லவிழ்ந்த வவிழை
அவிழ்ந்த மனத்தா லவிழ்க்க — அவிழ்ந்தசடை
வேந்தனார்க் கின்னமுத மாயிற்றே மெய்யன்பிற்
சேந்தனார் செய்த செயல்.

(வே. பா). 1. யானகத்து. 2. அன்பினை. 3. யாரறியும்.
* திருவாசகம், திருக்கோத்தும்பி. ௪.

49. வானகமும் மண்ணகமுமாய எல்லா விடமும் நிறைந்த பெரும்பொருளாகிய கடவுளுக்கு அவையெல்லாம் இருக்கையாம். அதுபோல அடியார் நெஞ்சகமும் அவருக்கு இடமாம். ஆயினும் பிறவிடங்களில் அப்பொருள் நன்கு விளங்காது அடியாருள்ளத்தே விளங்குதலின், அவர்கள் கூட்டுறவே பண்டை மல வாசனையை நீக்குதற்குத் தக்க வழியாம்.

50. கல்லிலே முட்டப்புகுந்த திருக்குறிப்புத் தொண்டரும், கமரில் இறை நிவேதனப்பொருள் நழுவினமைக்காகத் தமது ஊட்டியை அறுப்பான் புக்க அரிவாட்டாய நாயனாரும், வாளினால் வயிற்றைப் பிளந்திறந்த ஏயர்கோன் கலிக்காமரும், சந்தனச்சாணையினில் முழங்கையைத் தேய்த்த மூர்த்தி நாயனாரும், சூதாடுவதால் இறைபணிக்குப் பொருள் தேடிய மூர்க்க நாயனாரும் சிவனடிக்கீ ழொருமைப் பட்ட கருத்தினாலன்றோ, உலகவாதனையை ஒழித்தார்கள்; உலக நெறியிலே சென்றல்லவே.

51. அகம் புறம் என்ற நினைப்பு ஒழிய, எங்கும் அகண்டமாய் நிற்கும் பெருமானை வழிபடப் பழகியவிடத்தே அவர் தமது அருட்சத்தியோடு உன்மாட்டுத் தோன்றி யருள் புரிவர். ஆதலால் அறிவு நெறி அல்லது அன்பு நெறி என்ற இரண்டில் ஒன்றைக் கடைப்பிடிக்கவேண்டும்.

52. கண்ணப்பரதன்மைப் போன்றதொரு அன்பில்லையென்று மணிவாசகனார் அருளியபடியால், கண்ணப்பர்க்கீடாகவே சொல்லத் தகும் அவரன்பினைக் கண்ணப்பரும் காளத்தியப்பருமே அறிவாரன்றி அது பிறரறியுந் தரத்ததன்று.

53. துணியில் முடிந்த நிவேதனத்தை அவிழ்த்து அதிலிருந்த மலர்ந்த களியைத் தாழ்மை மிக்க மெய்யன்புடன் சேந்தனார் விரிசடை வேந்தனார்க்குப் படைக்க அது அப்பெருமானார்க்கு இன்னமுதமாயினது காண்க.

54. சுரந்த திருமுலைக்கே துய்ய [1]சிவ ஞானஞ்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச் — சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி வாழ்ந்த
மனமுடையா ளன்பிருந்த வாறு.

55. அன்பேயென் னன்பேயென் றன்பா லழுதரற்றி
அன்பேயன் பாக வறிவழியும் — அன்பன்றித்
தீர்த்தந் தியானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமவை
[2]சாற்றும் பழமன்றே தான்.

56. எல்லா ரறிவுகளின் தாற்பரிய மென்னறிவு
செல்லு மிடத்தளவுஞ் சென்றறிந்தேன் — வல்லபடி
வாதனையை மாற்றும் வகையிதுவே மற்றவற்றுள்
ஏதமறக் கண்ட திது.

57. வித்துமத னங்குரமும் போன்றிருக்கு மெய்ஞ்ஞானம்
வித்துமத னங்குரமு மெய்யுணரில் — வித்ததனிற்
காணாமை யாலதனைக் கைவிடுவர் கண்டவர்கள்
பேணாமை யாலற்றார் பேறு.

58. ஒன்றன் றிரண்டன் றுளதன் றிலதன்று
நன்றன்று தீதன்று [3]நானென்று — நின்ற
நிலையன்று நீயன்று நின்னறிவு மன்று
தலையன் றடியன்று தான்.

---

1. திருஞானம். 2. சார்த்தும். 3. நானன்று.

54. திருஞானசம்பந்தப் பெருமான், உமையம்மையார் சிவஞானத்தைத் தனது நகிலிற் சுரந்த பாலொடு கலந்து கொடுத்திட அதனைப் பருகினாரென்று கேட்டவளவிலேயே மங்கையர்க்கரசியாராகிய பாண்டிமா தேவியார் திருநகில் சுரந்தனர். அவரது தாழ்மன நிலையும் மெய்யன்பின் மிகுதியும் இருந்தவாறு காண்க.

55. இறைவனை உள்ளன்போடு அன்பே அன்பேயென அழைத்துருகித் தன்னுணர்ச்சி யிழக்கும் பேரன்பே பெரும் பயன். பிற புனிதநீர் முழுக்கு, கடவுள் நினைவு, மலர்தூவிப் போற்றல் எல்லாம் நேரே வீட்டிற்கு வாயிலாகா.

56. எல்லா அறிவு நூல்களின் கருத்தையும் யானறிந்த அளவு பார்க்குமிடத்து மலவாசனையை யொழிப்பதற்கு அன்பு செய்தலே தக்க உபாயமாம். குற்றமற்றதாக அவற்றுட் கண்ட நெறியிஃதே.

57. வித்தும் முளையும் போலச் சிவஞானமும் அதன் பயனாய சிவபோகமுமாம். வித்திடத்து முளையைக் காணாமையால் வித்தைக் கைவிடுவார்போல ஞானத்தின் பயனுணராதவர் ஞானத்தைப் பெறமுயலார். ஞானத்தைப் பெற்றவர்கள் அந்நெறியிற் பயின்றொழுகாமையால் சிவபோகத்தை யிழத்தல் கூடும்.

58. சிவமென்பது அத்துவிதமாய் உயிரறிவிற் கலந்து நிற்றலால் அந்நிலை ஒன்று என்று சொல்லக்கூடாதது; இரண்டென்றுஞ் சொல்லக்கூடாதது. தோன்றாமையால் உளதென்று சொல்ல வொண்ணாதது. ஞானிகளுக்கு அநுபவப் பொருளாதலின் இல்லாததன்று. நன்மை தீமை முதலியன நிகழ்தல் அவன் கட்டளையாதலால், அவன் செயலை நல்லதெனவும் தீயதெனவுங் கூற உயிர்களுக்கு இயலாததாகும். அது பாசத்தோடு நின்றநிலை அன்று. பசுவுமன்று. பசுபோதமுமன்று. ஆதியுமன்று. அந்தமுமன்று.

59. செய்யாச் செயலையவன் செய்யாமற் செய்ததனைச்
செய்யாச் செயலிற் செலுத்தினா — லெய்யாதே
மாணவக வப்பொழுதே வாஞ்சைக் கொடிவளர்க்கும்
ஆணவமு [1]மற்ற தறி.

60. ஏதேனுங் காலமுமா மேதேனுந் தேசமுமாம்
ஏதேனுந் திக்கா சனமுமாம் — ஏதேனுஞ்
செய்தா லொருவலுமாஞ் செய்யாச் செயலதனைச்
[2]செய்யாமற் செய்யும் பொழுது.

61. செய்தற் கரிய செயல்பலவுஞ் [3]செய்துபலர்
எய்தற் கரியதனை யெய்தினர்கள் — ஐயோநாஞ்
செய்யாமை செய்து செயலறுக்க லாயிருக்கச்
செய்யாமை செய்யாத வாறு.

62. இப்பொருள்க ளியாதேனு மேதேனு மொன்றுசெய்த
லெப்பொருளுஞ் செய்யா தொழிந்திருத்தன்-மெய்ப்
[பொருளைக்
கண்டிருத்தல் செய்யாதே கண்ட மனிதரெலாம்
உண்டிருப்ப தென்னோ வுரை.

63. வீட்டிலே சென்று வினையொழிந்து [4]நின்றாலும்
நாட்டிலே நல்வினைகள் [5]செய்தாலுங் — கூட்டில்வாள்
சாத்தியே நின்றிலையேற் றக்கனார் வேள்விசெய்த
மாத்திரமே யாங்கண்டாய் வந்து.

64. சிவன்முதலே யன்றி முதலில்லை யென்றுஞ்
சிவனுடைய தென்னறிவ தென்றுஞ் — சிவனவன
தென்செயல தாகின்ற தென்று மிவையிற்றைத்
தன்செயலாக் கொள்ளாமை தான்.

---

(வே. பா) 1. அற்றால் அறி. 2. செய்வா னொருவனுமாம். 3. செய்து சிலர். 4. நின்றிடினும்; நின்றிடிலென். 5. செய்திடிலென்

59. பொறியடக்கத்தோடு இறைவன் திருவருளை எதிர் பார்த்திருக்கும் அமையம் பார்த்து, இறைவன் உயிரைச் சும்மா இருக்கும் நிலையிற் செலுத்துவன். ஆங்குப் பெறும் சிவஞானத்தின்முன் அவாவினை வளர்க்கும் ஆணவமலம் நிலைபெறா தொழியும்.

60. காலம், இடம், திசை, இருக்கை என்பவற்றைப் பற்றிய நியமங்கள் ஞானநெறி நின்று இறைவனது கலப்பை உடைய உயிர்க்கு இல்லையாம்.

61. செயற்கரியவற்றைச் செய்து பெறுதற்கரிய பேறாகிய வீட்டினைச் சிலர் தலைப்பட்டார். நாம் ஒன்றுஞ் செய்யா திருத்தலாகிய ஒன்றைச் செய்து அதனைப் பெறக் கூடுமாயினும், அச்செய்யாமையைத்தானும் யாம் கடைப் பிடியாதிருத்தல் எத்துணைத் தவறு?

62. சிவதன்மம் முதலிய நெறிகளில் ஏதாவது ஒரு நெறியில் நிற்றல், அல்லது சும்மாவிருந்து இறையருள் நோக்குதல், அல்லது உயர்ஞான ஒழுக்கமாகிய பரம்பொருளையே பார்த்திருத்தல் ஆகிய இவற்றுள் ஒன்றுஞ் செய்யாது மக்கள் உண்டு உடலை மட்டும் ஓம்பியிருப்பதாற் பயனென்?

63. வீட்டுநெறியில் நின்று செயலற்றிருந்தாலென்? உலக வழியிலேநின்று புண்ணிய பாவங்களைச் செய்தாலென்? ஞானமாகிய வாளினை உள்ளத்தே துணையாகக்கொண்டு நில்லாவிடின் தக்கன்செய்த பெருவேள்வியேபோல நின்செயல் தீய பயன்விளைத்தல் கூடும்.

64. சிவன் இறைமையன்றி வேறு இறைமைப் பொருள் இல்லையென்றும், எனதறிவுஞ் சிவனுடைமையே யென்றும் என் செயலும் அவனது செயலாகின்றதென்றும் கொண்டு தன்செயலற்றிடின் சிவமாதல் கூடும்.

65. இன்றிச் சமயத்தி னல்லதுமற் றேழையுடன்
ஒன்றுசொலி மன்றத்து நின்றவரார் — இன்றிங்கே
அங்க முயிர்பெறவே பாடு [1]மடியவரார்
எங்குமிலை கண்டா யிது.

66. விரிந்துங் குவிந்தும் விழுங்குவர்கள் மீண்டுந்
தெரிந்துந் தெரியாது நிற்பர் — தெரிந்துந்
தெரியாது நிற்கின்ற சேயிழைபா லென்றும்
பிரியாது நின்றவனைப் பெற்று.

67. ஆதனமு மாதனியு மாய்நிறைந்து நின்றவனைச்
சேதனனைக் கொண்டே தெளிவுற்றுச் —சேதனனைச்
சேதனனி லேசெலுத்திச் சிற்பரத்த ராயிருப்பர்
ஏதமறக் கண்டவர்க ளின்று.

68. தாமடங்க விந்தத் தலமடங்குந் தாபதர்கள்
தாமுணரி விந்தத் தலமுணருந் — தாமுனியிற்
பூமடந்தை தங்காள் புகழ்மடந்தை போயகலும்
நாமடந்தை நில்லாள் நயந்து.

69. துரியங் கடந்தசுடர்த் தோகையுட னென்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான் — றுரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யுந் தன்மைகளும்
[2]ஆக்குவிப்ப னன்பர்க் கவன்.

---

(வே. பா.) 1. அடியவர்கள். 2. ஆக்கியிடும் அன்பர்க்கவன்.

65. இற்றைய ஞான்று இச்சிவமுதனெறியிலன்றி, ஒப்பற்ற ஞானத்தை மொழிந்து அருட்சத்தியுடன் இறைவன் திருநடம் புரிந்தது பிற எச்சமயத்திலும் இல்லை. இச் சமயத்திற் போல எலும்பு உயிராகும்படி அடியார் பாடியதும் பிற எச்சமயத்திலுங் கேட்டதில்லை.

66. உலகெலாம் அறிந்தும் அறிவித்தும் அதன்கண் துடக்குறாதுநிற்கும் அருட்சத்தியோடு கூடிய பெருமானைத் தமது அறிவிற்பெற்ற பெரியோர்கள் சுட்டற்ற விரிந்த அறிவுடையராய்ச் சிவபோகத்திலழுந்தி, அதனாலுண்டாம் பேரானந்தத்தை விழுங்கி, ஊழினால் உலகம் தோன்றினும் அதனை அழுந்தி அறியாது நிற்பர்.

67. தத்துவங்களாகிய இருக்கையும், உயிராகிய இருப்போனும் ஆகிய இரு வகையிலுங் கலந்து நிறைந்து நின்ற பெருமானை அறிவாசான் நல்கிய திருஞானத்தாலறிந்து, உயிராகிய அறிவுடைப் பொருளை முதல்வனாகிய பேரறிவனிடத்தே செலுத்தி உயர்ஞானச் செல்வராய்த் திகழ்வர் மலம் நீங்கிய பெரியோரென வுணர்க.

68. ஞானிகள் ஒடுங்க உலகமொடுங்கும்; அவர்கள் உலகை நோக்கின் உலகம் உணர்ச்சியுடையதாகும். அவர்கள் சினந்தால் செல்வமும் புகழும் கல்வியும் தங்கா.

69. உயிரறிவாலறியப்படாத மேலான அருட் சத்தியுடன் கூடிய பெருமான் ஞானிகட்கு நனவிலே புலனாம் வண்ணம் கலந்து தோன்றி தனது செயல்களை அவர்கள் வாயிலாகச் செய்வித்து, அவர்களுடையனவாகத் தோற்றுவிப்பன்.

70. ஓடஞ் சிவிகை யுலவாக் கிழியடைக்சப்
பாடல் பனைதாளம் பாலைநெய்தல் — [1]ஏடெதிர்வெப்
பென்புக் குயிர்கொடுத்த [2]லீங்கிவைதா மோங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்.

71. கொல்கரியி னீற்றறையி னஞ்சிற் கொலைதவிர்த்தல்
கல்லே மிதப்பாக் கடனீந்தல் — நல்ல
மருவார் மறைக்காட்டின் வாசல்திறப் பித்தல்
[3] திருவாமூ ராளி செயல்.

72. மோக மறுத்திடின்நாம் முத்தி கொடுப்பதென
ஆகமங்கள் சொன்ன வவர்தம்மைத் — தோகையர்பால்
தூதாகப் போகவிடும் வன்றொண்டன் [4]தொண்டுதனை
ஏதாகச் சொல்வே னியான்.

73. பாய்பரியோன் றந்த பரமானந் தப்பயனைத்
தூயதிரு வாய்மலரால் சொற்செய்து — மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தேன்.

74. அம்மையிலு மிம்மையிலு மச்சந் தவிர்த்தடியார்
எம்மையுமா யெங்கு மியங்குதலான் — மெய்ம்மைச்
சிவயோக மேயோக மல்லாத யோகம்
அவயோக மென்றே யறி.

---

1. ஏடெரிவெப் 2. ஈங்கிவைகாண். 3. திருவாகீசன்றன் செயல். 4. தொண்டுகளை.

70. புகலிவேந்தர் பொருட்டுத் திருக்கொள்ளம் பூதூரிலே ஓடத்தைச் செல்வித்தும், சிவிகை, குறையாத பொன்முடிச்சு, பொற்றாளம் முதலியன நல்கியும், ஆண் பனையைப் பெண் பனையாக்கியும், திருப்பாடலால் மறைக் காட்டில் கதவமடைப்பித்தும், பாலையை நெய்தலாக்கியும், ஏட்டினை ஆற்றினெதிரே செல்வித்தும், தீயில் ஏட்டினைக் காத்தும், பாண்டியனுக்கு வெப்புநோய் தீர்த்தும், எலும்புக் குயிர் கொடுத்தும் இறைவன் தன் செயல்களை அவர் செய லாக்கினன்.

71. கொல்லவந்த யானையாலும், நீற்றறையிலும், நஞ்சாலும் நேரக்கூடிய கொலையைத் தவிர்ந்தும், கல்லே தெப்பமாகக் கடல் நீந்திக் கரையேறியும், திருமறைக் காட்டில் திருக்கதவு திறப்பித்தும் திருவாமூர் அடிகள் அருட் செயல் செய்தமை காண்க.

72. பெண்டிர் வேட்கை விட்டவர்க்கே வீடு நல்குவ தாக அருள் நூலுள் மொழிந்த பெருமானைத் தான் விரும்பிய மாதின்பால் தூது விடுக்கும் வன்றொண்டர் செயலை என் னென்று சொல்வது?

73. திருவாதவூரடிகளாகிய தேன் போன்ற இனிய தன் மையார், பரிமேல் வந்த பரமானந்தக் கடவுள்மீது திருவாச கம் திருவாய் மலர்ந்து, மயக்கந் தரும் பிறவி வாசனையை எமக்குத் தொலைத்தருளினார்.

74. சிவனையறிந்து கூடிய யோகத்தால் இம்மை மறுமை அச்சங்கள் தீர்ந்த அடியார் எக்காலத்திலும் எவ்விடத்திலுஞ் செல்லும் பேராற்றல் பெற்றியங்குதலால், சிவயோகமே யோகங்கள் பலவற்றினுஞ் சிறந்தது. பிறவகை யோகங்கள் பிறவியைத் தொலைக்கப் பயன்படா.

75. மன்னன‌ருளெவ்வண்ண மானுடர்பான் மாணவக
அன்ன [1]வகையே யரனருளு — மென்னில்
அடியவரே யெல்லாரு மாங்கவர்தா மொப்பில்
அடியவரே யெல்லா மறி.

76. உடம்புடைய யோகிகள்தா முற்றசிற் றின்பம்
அடங்கத்தம் பேரின்பத் [2]தாக்கத் — தொடங்கி
முளைப்பதுமொன் றில்லை முடிவதுமொன் றில்லை
இளைப்பதுமொன் றில்லை யிவர்.

77. பேரின்ப மான பிரமக் கிழத்தியுடன்
ஓரின்பத் துள்ளானை யுள்ளபடி — பேரின்பங்
கண்டவரே கண்டார் கடலுயிர்த்த வின்னமுதம்
உண்டவரே யுண்டார் சுவை.

78. நங்கையினான் நாமனைத்துஞ் செய்தார்போல்
[நாடனைத்து
நங்கையினாற் செய்தளிக்கு நாயகனும் — நங்கையினும்
நம்பியாய்த் தானடுவே நாட்டப் பெறுமிதுகாண்
எம்பெருமா னார்த்த மியல்பு.

79. பொன்னிறங் கட்டியினும் பூணினு நின்றாற்போல்
அந்நிற மண்ணலு மம்பிகையுஞ் — செந்நிறத்தள்
எந்நிறத்த ளாயிருப்ப ளெங்கள் சிவபதியும்
அந்நிறத்தனா யிருப்ப னாங்கு.

---

(வே. பா.) 1. வகையே யானருளு. 2. தாக்கில்.

**75.** மனிதர்பால் மன்னன் அருள் செய்தல் எவ்வாறோ, அவ்வாறே உயிர்களிடத்து ஈசனருளுமாம். அதாவது தகுதி யறிந்து பயனளித்தல். எல்லாவுயிரும் ஈசனுடைய அடிமை களேயாயினும், யோகிகளும் ஞானிகளுமே சிறந்த ஒப்பற்ற அடியாராவர்.

**76.** சிவஞானம் பெற்ற யோகிகள் உடம்போடிருக்குங் காலை, சிற்றின்பத்தை ஊழ்வலியால் நுகர நேர்ந்தாலும், அதனைப் பேரின்பமாகக் கருதுவாராதலின், அதனால் பிற விக்கு வித்தாய் வரும் வினை யாதுமில்லை. சிற்றின்பத் தொடர்பாலுளவாம் மாய்வுந்தேய்வுமில்லை.

**77.** திருப்பாற் கடலில் உண்டான அமுதத்தை உண்டவர்களே அதன் சுவையைக் கண்டு சாவு நீங்கினவ ராவர். அதுபோலப் பேரின்ப வடிவமான பெரிய சத்தியோடு ஒப்பற்ற இன்பமுடையானைக் கண்டவர்களே பேரின்ப நுகர்ந்து பிறவியறுத்தவராவர்.

**78.** நமது கையினால் நாம் செய்யுங் காரியங்களெல் லாம் செய்தல்போல, உமையம்மையால் உலகமெல்லாம் உண்டாக்கிக் காப்பவன் முதல்வன். அவ்வருட்சத்தி நடுவே சிவம் நிற்றலின், அருட்சத்தியின் செயலெல்லாம் சிவன் செயலாகவே கருதுக.

**79.** பொன்னின் மாற்றானது பொன்னாலாய பணி யினும் பொற்கட்டியினும் ஒருதன்மையதாயிருப்பதுபோல, அப்பனுமம்மையுமாம். அம்மை எவ்வடிவமாயிருக்கின்றா ளோ, அவ்வாறே இறைவனும் அவளுடன் கலந்திருப்பன். அதாவது ஐந்தொழிலியற்றுதற்பொருட்டுச் சத்தி வெவ்வேறு வடிவங் கொள்ளினும், சிவபெருமான் ஒருதன்மையாக அவளு டன் கலந்திருப்பன் என்பதே கருத்து.

80. தாரத்தோ டொன்றாவர் தாரத்தோர் கூறாவர்
தாரத்தோ டெங்குந் தலைநிற்பர் — தாரத்தின்
நாதாந்தத் தேயிருப்பர் [1] நற்றானத் தேயிருப்பர்
வேதாந்தத் தேயிருப்பர் வேறு.

81. ஒன்றுரைத்த தொன்றுரையாச் சாத்திரங்க ளொன்றாக
நின்றுரைத்து நிச்சயிக்க மாட்டாவால் — இன்றுரைக்க
என்னா லியன்றிடுமோ வென்போல்வா ரேதேனுஞ்
சொன்னால்தா னேறுமோ சொல்.

82. யாதேனுங் காரணத்தா லெவ்வுலகி லெத்திறமு
[2]மாதேயும் பாக னிலச்சினையே — ஆதலினாற்
பேதமே செய்வா யபேதமே செய்திடுவாய்
பேதாபே தஞ்செய்வாய் பின்.

83. நின்றபடி நின்றவர்கட் கன்றி [3] நிறந்தெரியா
மன்றினுணின் றாடன் மகிழ்ந்தானுஞ் — சென்றுடனே
எண்ணுறுமைம் பூதமுத லெட்டுருவாய் நின்றானும்
பெண்ணுறநின் றாடும் பிரான்.

---

(வே. பா) 1. நாற்றானத்தே யிருப்பர், 2. யாதேயும் பாக னிலச்சினையே. 3. நிறந்தெரியான்.

80. நுண்ணிய ஐந்தொழிலிலே இறைவர் சத்தியோடு ஒத்து நிற்பர். பருவுடம்புளதாகற்பொருட்டுச் சத்தி கூறனாகவுமிருப்பர். அதிகாரிகளாய ஐவரை அதிட்டித்து எவ்விடத்தும் அம்மை செயற்குத் தலைமைபூண்டிருப்பர். ஒடுக்கத்திலே நாத தத்துவ முடிவிலேயும் சத்தியோடிருப்பர். நாலாந் தொழிலாகிய மறைப்பாற்றற்கண்ணும் சத்தியோடியைந்து நிற்பர். உலகங்கடந்த அருள்வெளியிலே பராசத்தியோடிருப்பர். சத்தியை உள்ளடக்கித் தனியேயுமிருப்பர்.

81. பலவேறு முரண்பட்டனவாகத் தோன்றுங் கொள்கையுடையநூல்கள் ஒருங்கு ஒத்து ஒன்றைத் துணிந்தியம்பமாட்டா. அவற்றைப் பின்பற்றி யொழுகு மக்கட்கு, யான் ஏதாவது சொல்லக்கூடுமா? ஏதாவது சொன்னால் அது அவர்கள் உள்ளத்தில் ஏறுமா?

82. எக்காரணத்தாலும் எல்லா உலகிலுமுள்ள எல்லா வகைப் பொருள்களும், மாதொரு பாகனாரது அடையாளங்களே ஆகும். ஆதல்பற்றி, ஒற்றுமைப்படுத்தியும், அவற்றின் வேறாதல்பற்றி வேற்றுமைப்படுத்தியும், இரு தன்மையும் இருத்தல்பற்றி இடைநிகர்த்தாயும் பேசுக. எவ்வாறு பேசினும் உண்மை நோக்கிப் பொருந்துமாறறிக.

83. யாவற்றையும் படைப்பான், நிலம், நீர், நெருப்பு, கால், வான், மதி, ஞாயிறு, உயிர் ஆகியவற்றைத் திருமேனியாக் கொண்டானும், உயிர்களைக் காக்க, மன்றினில் நடம் புரிந்தானும், மாதொடுமாத்திரம் கூடி ஒடுங்குங் காலத்து ஆடினானும் ஆகிய பெருமானது தன்மையை அவன்றன்னைத் தோற்றுவியாது உலகந் தோன்ற நின்றதுபோலத் தன்னுணர்ச்சி தோன்றப் பெறாது அவனோடு அத்துவிதமாய் நின்ற பெரியோரன்றிப் பிறர் அறியார்.

84. சிவமே சிவமாக யானினைந்தாற் போலச்
சிவமாகி [1]யேயிருப்ப தன்றிச் — சிவமென்
றுணர்வாரு மங்கே யுணர்வழியச் சென்று
புணர்வாரு முண்டோ புவி.

85. அதுவிது வென்று மவனானே யென்றும்
அதுநீயே யாகின்றா யென்றும் — அதுவானேன்
என்றுந் தமையுணர்ந்தா ரெல்லா மிரண்டாக
ஒன்றாகச் சொல்வரோ வுற்று.

86. *ஈறாகி யங்கே முதலொன்றா யீங்கிரண்டாய்
மாறாத வெண்வகையாய் மற்றிவற்றின் — வேறாய்
உடனா யிருக்கு முருவுடைமை யென்றுங்
கடனா யிருக்கின்றான் காண்.

87. உன்னுதரத் தேகிடந்த கீட முறுவதெல்லாம்
உன்னுடைய தென்னாநீ யுற்றனையோ — மன்னுயிர்கள்
அவ்வகையே காணீங் கழிவதுவு மாவதுவுஞ்
செவ்வகையே நின்றசிவன் பால்.

88. அவனே [2]யவனி முதலாயி னானும்
அவனே யறிவாய்நின் றானும் — அவனேகாண்
ஆணாகிப் பெண்ணா யலியாகி நின்றானுங்
காணாமை நின்றானுங் கண்டு.

89. இன்றுதா னீயென்னைக் [3]கண்டிருந்துங் கண்டாயோ
[4]அன்றித்தா னானுன்னைக் கண்டேனோ — என்றால்
அருமாயை யீன்றவள்தன் பங்கனையார் காண்பார்
பெருமாயைச் சூழல் பிழைத்து.

---

*திருஞான. தேவாரம். திருவீழிமிழலை. பண் - நட்டபாடை. உ.
(வே. பா.) 1. யேயிருத்த. 2. அவனிமுத லாகிநின்றானும்
3. கண்டிருந்தே. 4. அன்றுதான்.

84. சிவத்தோடத்துவிதமாய்ச் சிவநினைவொன்றே யுடையராயிருப்பதன்றி, இவ்வுலகில் சிவத்தைத் தன்னின் வேறென்றுணர்வாரும் அறிவு கெட்டுச் சிவம் அடையப் பெறுவாரும் வீட்டினராதலுண்டோ?

85. சிவமும் உயிரும் வேறென்றும், உயிரே சிவமன்றிச் சிவமென ஒன்று வேறில்லை என்றும், நான் சிவமேயாய் விட்டேனென்றும், தம்மை யுணர்ந்த அறிவர்கள் வேற்றுமையாகவும் ஒருமையாகவும் பேசுவாரோ? பேசாரென அறிக.

86. எல்லாம் முடிவுற்ற காலத்திலே, ஒரே முதற்பொருளாய்ப் படைப்புக் காப்புக் காலத்திலே சத்திசிவமென இரண்டாய் ஒவ்வொரு படைப்புத் தோறும் மாறாது தோன்றும் எண்வகை வடிவனாய்த் தன்றன்மையால் வேறாய்த் தலைவனாதலின் உடனாயிருத்தலைத் தனது கடனாகக் கொண்டான் கடவுளென்றறிக.

87. உன்வயிற்றிலே கிடந்த புழுப்படுந் துன்பமெல்லாம், உன்னுடைய துன்பமென்று சொல்லமாட்டாய்; நீ அவற்றை நுகராமையால். அவ்வாறே சிவன்பால் நின்ற மன்னுயிர்கள் தோன்றுவது மழிவதுமாய செய்கை வகைகளால் அவை துன்புறுமேயன்றி அவன் துன்புறானென அறிக.

88. நிலமுதலிய சடவுலகெல்லாம் அவனே அறிவால் நிறைந்து நிற்பவன். அவனே உயிர்களறிவுக்கறிவாய்நிற்பவன். அவனே ஆண் பெண் அலியென்ற முத்திறப்படைப்பிற்கு மாதியாய் நிற்பவன். இத்தனை வகையாக நின்றும் உயிர்களால் காணப்படாமல் நிற்பவனும் அவனே.

89. இன்று நீ என்னை உடம்பு வழியாகப் பார்த்தும் அதனின் வேறாகக் கண்டதுண்டோ? அவ்வாறே நானும் உன்னைக் கண்டேனோ? இல்லையே. அங்ஙனமாயின் மாயைப் பெருமறைப்பிற்கப்பாற்பட்ட இறைவனை அவன் காட்டுவித்தாலன்றிக் காண்பார் யார்?

90. கடலலைத்தே யாடுதற்குக் கைவந்து நின்றுங்
கடலளக்க வாராதாற் போலப் — படியில்
அருத்திசெய்த வன்பரைவந் தாண்டதுவு மெல்லாங்
கருத்துக்குச் சேயனாய்க் காண்.

91. *சிவனெனவே தேறினன்யா னென்றமையா லின்றுஞ்
சிவனவனி வந்தபடி செப்பில் — அவனிதனில்
உப்பெனவே கூர்மை யுருச்செய்யக் கண்டமையால்
அப்படியே கண்டா யவன்.

92. அவனிவனாய் நின்ற தவனருளா லல்ல
தெவனவனாய் நிற்கின்ற தேழாய் — அவனிதனில்
தோன்றுமரப் புல்லூரி தொல்லுலகி லம்மரமாய்
ஈன்றிடுமோ சொல்லா யிது.

93. முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்
தத்தி பழுத்த தருளென்னுங் — கத்தியினான்
மோகக் கொடியறுக்க முத்திப் பழம்பழுக்கும்
ஏகக் கொடியெழுங்கா ணின்று.

94. அகளத்தி லானந்தத் தானந்தி யாயே
சகளத்திற் றையலுடன் றோன்றி — நிகளத்தைப்
போக்குவதுஞ் செய்தான்றன் பொன்னடியென் [[1] புன்றலைமேல்
ஆக்குவதுஞ் செய்தா னவன்,

* திருவாசகம். திருவண்டப்பகுதி. அடி. கூஉ.
(வே. பா.) 1. புன்தலையில்.

90. கடலிலே அலைகளால் அலைப்புறாது ஆடும்படி நின்றவர்க்கும் கடலின் ஆழத்தையும் அகலத்தையும் அளத்தலரிது. அதுபோல முதல்வன் அன்பரை ஆண்டவிடத்தும் அம்முதல்வன் உயிரின் கருத்தால் அளவிடப்படுதற்கு அரியன் என்றுணர்க.

91. சிவனெனவே தேறினன்யான் என்று மணிவாசகர் அவனிமீது வந்த பெருமானைக் கூறினாரல்லரோ எனின், கடல்நீரின்கண் உப்பானது நிறைந்து உருக்கொண்டமை போல இறைவனும் ஆசிரியனாக அருளாலே திருமேனி கொண்டான் என்றறிக.

92. இறைவன் தனது திருவருளால் ஆசிரிய வடிவங் கொண்டு நிற்கின்றானென்றறிக. இறைவன் அருளுருக் கொண்டு ஆசிரியனை அதிட்டியாவிடத்தே, ஆசிரியனாகிய உயிர் யாதொரு பயனையும் நல்காது. மரம் பலனளிப்பதன்றி மரத்தைப்பற்றிய புல்லூரி, மரத்தின் பலத்தைக் கொடுக்க வல்லதோ?

93. வீடுபெறுதற்குரிய உயிரென்னுங் கொடிமீதே ஆணவமான கொடிபடர்ந்து உடம்பென்னும் பழம் பழுத்தது; அவ்வாணவக்கொடியை அருளென்னுங் கத்தியினால் அறுக்கவே முத்தியெனும்பழம் பழுத்தற்குரிய சிவமாகிய ஒரு தனிக் கொடி விளங்கித்தோன்றும்.

94. இறைவன், ஆசிரியன்றிருமேனியின்பால் அருட் சத்தியோடுந் தோன்றி, குற்றமற்ற அருள்வெளியிலுள்ள பரமானந்தத்தை நல்கும் வடிவுடனிருந்து, எனது விலங்காகிய ஆணவத்தைத் தொலைத்துத் தன் பொன்னடியை என் புன்றலை மேல் வைத்தனன்.

95. குற்றமறுத் தென்னையாட் கொண்டருளித்
[தொண்டனேன்
உற்ற தியானத் துடனுறைவர்—முற்றவரின்
மாட்சியுமாய் நிற்பரியான் மற்றொன்றைக் கண்டிடினக்
காட்சியுமாய் நிற்பார் கலந்து.

96. ஆளுடையா னெந்தரமு மாளுடையா னேயறியுந்
தாளுடையான் றொண்டர் தலைக்காவல் — நாளுந்
திருவியலூ ராளுஞ் சிவயோகி யின்றென்
வருவினையை மாற்றினான் வந்து.

97. தூலத் தடுத்த பளிங்கின் துளக்கமெனத்
தூலத்தே நின்று துலங்காமற்—காலத்தால்
தாளைத்தந் தென்பிறவித் தாளை யறவிழித்தார்க்
காளன்றி யென்மா றதற்கு.

98. இக்கணமே முத்தியினை யெய்திடினு மியானினைந்த
அக்கணமே யானந்தந் தந்திடினும் — நற்கணத்தார்
நாயகற்கும் நாயகிக்கும் [1] நானடிமை யெப்பொழுது
மாயிருத்த லன்றியிலே னியான்.

99. என்னை யுடையவன்வந் தென்னுடனா யென்னளவில்
என்னையுந்தன் னாளாகக் கொள்ளுதலால் — என்னை
அறியப்பெற் றேனறிந்த வன்பருக்கே யாளாய்ச்
செறியப்பெற் றேன்குழுவிற் சென்று.

---

1. நந்திக்கும் யானடிமை; நானடிமை நந்திக்கும்.

95. இறைவர் என் குற்றமாய பாசங்களை யறுத்து என்னை ஆட்கொண்டு, என் நினைவுடன் நினைவாய்நின்று நினைவு முற்றிய இடத்திலே பேரானந்தமயமாய் நிற்பர்; நான் வேறு எதனைக் காண்கினும் அக்காட்சிப் பொருளிலேயும் நிற்கின்றார்.

96. திருவியலூரினை உடைய சிவயோகியாகிய ஆளுடையா னென்னுந் திருநாமமுடையான், எம்போலியரையும் ஆட்கொள்ளும் கருணை உடையவன், அடியாரைக் காப்பாற்றுந் தலைவன், இப்போது பிறவியில் உழலும் எனது வேகத்தை மாற்றித் திருவடியின்கீழ் என்னை வைத்தான்.

97. பலவகைத் திண்ணிய நிறப்பொருள்களைக் கலந்து தன்னொளி விளங்காதிருக்கும் படிகம்போல மாயைப் படைப்புக்களிலே பொருந்தி அலமராவண்ணம், பக்குவகாலத்தே தன் திருவடிகளைத் தந்து என் பிறவிவேரை அறவே கெடுத்தார்க்கு நான் அடிமையாயிருத்தலன்றி வேறு யான் செய்யும் கைம்மாறு யாது?

98. இப்போதே இறைவன் வீட்டினை அளிப்பினும், நான் அதனை விரும்பி நினைந்தபோதே ஆனந்தமளித்திடினும், அடியார் தலைவனுக்குந் தலைவிக்கும் நான் எப்போதும் அடிமையாயிருத்தலையன்றி வேறறியேன்.

99. என்னை எப்போதும் உடைமையாகவுடைய பெருமான் வந்து என்னுடன் கலந்து என்னறிவளவில் என்னைத் தன்னடிமையாகக்கொண்டமையால், என்னை நான் அறியப்பெற்றேன். தம்மையறிந்த பேரன்பர்க்கு அடிமையாய் அவர் கூட்டத்திற் சேர்ந்து ஒழுகப் பெற்றேன்.

100. சிந்தையிலு மென்றன் சிரத்தினிலுஞ் [1]சேரும்வகை
வந்தவனை மண்ணிடைநாம் வாராமல் — தந்தவனை
மாதினுட னெத்திறமும் வாழ்ந்திருக்க வென்பதலால்
ஏதுசொலி வாழ்த்துவே [2]னின்று.

101. ஆதார மாகி அருளொடு நிற்கின்ற
சூதான இன்பச் சுகவடிவை — ஓதாமல்
உள்ளவர்கள் கூடி யுணர்வொழிய நிற்பதலால்
தெள்ளவா ராதே சிவம்.

102. பொருளு மனையு மறமறந்து போக மறந்து புலன்மறந்து
கருவி கரண மவைமறந்த கால மறந்து கலைமறந்து
தரும மறந்து தவமறந்து தம்மை மறந்து தற்பரத்தோ
டுருகி யுருகி ஒருநீர்மை யாயே விட்டார் உய்யவந்தார்.

திருக்களிற்றுப்படியார்
முற்றும்

---

1. சேரும் வண்ணம். 2. நான்.

100. என் உள்ளத்திலும் என் சென்னியிலும் திருவடி வைத்து ஆட்கொள்ளவந்த பெருமானை, மீண்டும் பிறவாத நிலை தந்தவனை அவனது திருவருட்சத்தியுடன் எப்போதும் எவ்விடத்தும் அவன் வாழ்ந்தருள்க என்று வாழ்த்துதலன்றி வேறு எதுசொல்லி அவனை நான் இப்போது வாழ்த்த முடியும்?

திருக்களிற்றுப்படியார் முற்றிற்று.

# திருவுந்தியார்
# செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

*[எண் : பாட்டெண்]*


| | |
|---|---|
| அகளமா யாரு | 1 |
| அஞ்சே யஞ்சாக | 10 |
| அண்ட முதலா | 42 |
| அதுவிது வென்னா | 39 |
| அவனிவ னான | 40 |
| அவிழ விருக்கு | 27 |
| ஆக்கிலங் கேயுண்டா | 9 |
| ஆதாரத் தாலே | 8 |
| இங்ங னிருந்ததென் | 4 |
| இரவு பகலில்லா | 20 |
| உழவா துணர்கின்ற | 16 |
| உள்ள முருகி | 7 |
| உள்ளும் புறம்பும் | 26 |
| எட்டுக்கொண் டார்தமைத் | 24 |
| ஏகனுமாகி | 5 |
| ஓட்டற்று நின்ற | 13 |
| கண்டத்தைக் கொண்டு | 3 |
| கருது வதன்முன் | 19 |
| கள்ளரோ டில்ல | 23 |
| காயத்துள் மெய்ஞ்ஞானக் | 43 |
| காற்றினை மாற்றிக் | 22 |
| கிடந்த கிழவியைக் | 15 |
| சாவிபோ மற்றச் | 31 |
| சித்தமுந்திய | 25 |
| சிந்தையி னுள்ளுமென் | 44 |
| சென்ற நெறியெல்லாஞ் | 37 |
| சொல்லு மிடமன்று | 29 |
| சொல்லும் பொருள்களுஞ் | 21 |
| தாக்கியே தாக்காது | 11 |
| திருச்சிலம் போசை | 17 |
| துரியங் கடந்தவித் | 32 |
| நஞ்செய லற்றிந்த | 6 |
| நாலாய பூதமு | 36 |
| பழக்கந் தவிரப் | 2 |
| பற்றை யறுப்பதோர் | 14 |
| பெண்டிர் பிடிபோல | 35 |
| பெற்றசிற் றின்பமே | 33 |
| பேரின்ப மான | 34 |
| பொற்கொழுக் கொண்டு | 38 |
| மருளுந் தெருளு | 18 |
| முத்தி முதலுக்கே | 41 |
| மூலை யிருந்தாரை | 12 |
| வித்தினைத் தேடி | 28 |
| வீட்டி லிருக்கிலென் | 30 |
| வையா முழுது | 45 |

# திருக்களிற்றுப்படியார்
# செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

[எண் : பாட்டெண்]


| | |
|---|---|
| அகளத்தி லானந்தத் | 94 |
| அகளமய மாய்நின்ற | 4 |
| அஞ்செழுத்து மேயம்மை | 26 |
| அதுவிது வென்று | 85 |
| அநாதி சிவனுடைமை | 43 |
| அம்மையப்ப ரேயுலகுக் | 1 |
| அம்மையிலு மிம்மையிலு | 74 |
| அரன வுணர்வுதனி | 41 |
| அவனிவனாய் நின்ற | 92 |
| அவனே யவனி | 88 |
| அவிழ்ந்த துணியி | 53 |
| அறிவறியாய் நிற்கி | 32 |
| அன்பேயென் னன்பேயென் | 55 |
| அன்றிவரு மைம்புலனு | 35 |
| அன்றுமுத லாரேனு | 9 |
| ஆகமங்க ளெங்கே | 5 |
| ஆக்கப்படாத | 25 |
| ஆக்கியொரு பொருளை | 23 |
| ஆதனமு மாதனியு | 67 |
| ஆதார மாகி | 101 |
| ஆதார யோகம் | 22 |
| ஆதியை யர்ச்சித்தற் | 17 |
| ஆளுடையா னெந்தரமு | 96 |
| ஆற்றா லலைகெடற்கே | 11 |
| இக்கணமே முத்தியினை | 98 |
| இப்பொருள்க ளியாதேனு | 62 |
| இன்றிங் கசேதனமா | 42 |
| இன்றிச் சமயத்தி | 95 |
| இன்றுதா னீயென்னைக் | 89 |
| இன்று பசுவின் | 7 |
| ஈறாகி யங்கே | 86 |
| உடம்புடைய யோகிகள் | 76 |
| உணராதே யாது | 31 |
| உண்டெனி லுண்டாகு | 36 |
| உள்ள முதலனைத்து | 14 |
| உள்ளும் புறப்பும் | 51 |
| உன்னுதரத் தேகிடந்த | 87 |
| எத்தனையோ தத்துவங்க | 38 |
| எல்லா ரறிவுகளின் | 56 |
| என்னறிவு சென்றளவில் | 3 |
| என்னை யுடையவன்வந் | 99 |
| ஏதேனுங் காலமுமா | 60 |
| ஒன்றன் றிரண்டன் | 58 |
| ஒன்றுங் குறியே | 10 |
| ஒன்றுரைத்த தொன்றுரை | 81 |
| ஓசையெலா மற்றா | 33 |
| ஓடஞ் சிவிகை | 70 |
| ஓட்டற்று நின்ற | 29 |
| கடலலைத்தே யாடுதற்குக் | 90 |
| கண்டதைக் கொண்டு | 8 |
| கண்ணப்ப னொப்பதோ | 52 |
| கண்ணுங் கருத்துங் | 48 |
| கல்லிற் கமரிற் | 50 |
| காண்கின்ற தோர்பொரு ளைக் | 27 |
| குற்றமறுத் தென்னையாட் | 95 |
| கொண்ட தொருபொருளைக் | 24 |
| கொல்கரியி.னீற்றறையி | 71 |
| சாத்திரத்தை யோதி னர்க்குச் | 6 |
| சாம்பொழுதி லேதுஞ் | 39 |
| சார்புணர்ந்து சார்பு | 34 |

| | | | |
|---|---|---|---|
| சிந்தையிலு மென்றன் | 100 | நல்லசிவ தன்மத்தா | 15 |
| சிவமே சிவமாக | 84 | நின்றபடி நின்றவர்கட் | 83 |
| சிவனெனவே தேறினன்யா | 91 | பற்றினுட் பற்றைத் | 30 |
| சிவன் முதலே யன்றி | 94 | பாதக மென்றும் | 19 |
| சுரந்த திருமுலைக்கே | 54 | பாய்பரியோன் றந்த | 73 |
| செத்தாரே கெட்டார் | 47 | பாலைநெய்தல் பாடியதும் | 12 |
| செய்தற்கரிய | 61 | பேசாமை பெற்றதனிற் | 28 |
| செய்யாச் செயலையவன் | 59 | பேரின்ப மான | 77 |
| செய்யி லுகுத்த | 20 | பொருளு மனையு | 102 |
| செய்யுஞ் செயலே | 21 | பொன்னிறங் கட்டியினும் | 79 |
| தம்மிற் சிவலிங்கங் | 44 | மன்னனருளெவ்வண்ண | 75 |
| தம்மிற் றலைப்பட்டார் | 2 | முத்தி முதற் கொடிக்கே | 93 |
| தன்னைப் பெறுவதன்மேற் | 45 | மெல்வினையே யென்ன | 16 |
| தாமடங்க விந்தத் | 68 | மோக மறுத்திடின் நாம் | 72 |
| தாரத்தோ டொன்றாவர் | 80 | யாதேனுங் காரணத்தா | 82 |
| துரியங் கடந்த சுடர்த் | 69 | வரங்கடருஞ் செய்ய | 18 |
| துன்பமா மெல்லாம் | 46 | வானகமு மண்ணகமு | 49 |
| தூங்கினரைத் தூய | 13 | வித்துமத னங்குரமும் | 57 |
| தூலத் தடுத்த | 97 | விரிந்துங் குவிந்தும் | 66 |
| தூல வுடம்பாய | 37 | வீட்டிலே சென்று | 63 |
| நங்கையினான் நாமனைத்துஞ் | 78 | வேண்டுங்கால் வேண்டும் | 40 |

# பேரா. கா. சு. பிள்ளையின் நூல்கள்

| | | |
|---|---|---|
| திருக்குறள் பொழிப்புரை | 20 | 00 |
| அப்பர் சுவாமிகள் வரலாறு | 12 | 00 |
| மணிவாசகப்பெருமான் வரலாறு | 10 | 00 |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு | 14 | 00 |
| சிவஞான முனிவர் வரலாறு | 12 | 00 |
| குமரகுருபர அடிகள் வரலாறு | 10 | 00 |
| தாயுமானவர் வரலாறு | 16 | 00 |
| பட்டினத்தார் வரலாறும் நூலாராய்ச்சியும் | 5 | 00 |
| மெய்கண்டாரும் சிவஞானபோதமும் | 15 | 00 |
| தமிழர் சமயம் | 12 | 00 |
| குமரகுருபரர் காட்டிய வழி | 6 | 00 |
| சைவசித்தாந்த சந்தானாசாரியர்களும் அவர்களின் அருள் நூல்களும் | 6 | 50 |

# கழக வெளியீடு

## மெய்கண்ட சாத்திர நூல்கள்
## பதினான்கினுள் முதல் இரண்டு நூல்கள்

பேராசிரியர் கா. சு. பிள்ளை அவர்கள் மெய்கண்ட நூல்கள் பதினான்குக்கும் உரைநடை எழுதியுள்ளார். அவையே பாட்டு ஒரு பக்கமும் உரை மறுபக்கமுமாகத் தெளிவுரை வடிவில் முதன்முதலாக இவ்வடிவில் வெளியிடப்பெறுகிறது.

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
154 டி. டி. கே. சாலை, சென்னை-18

அப்பர் அச்சகம், சென்னை-108.